# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

1.12.69



விலை 20

## நல்ல சமயமடா!

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் தமிழகம் வந்த இந்திரா காந்தி "மொழிப் பிரச்னை, மறுபரிசீலனைக்கு உரியது தான்" என்று ஒப்புக்கொண்டு டெல்லி சென்றார். இதுவரையில், அவர் பிரதமராகி விட்ட பின்பும் மறுபரிசீலனைக்காக என்ன செய்தார் என்றே தெரியவில்லை. மொழி விவகாரம், தீயென பரவிக் கொண்டிருக்கும் நாள் இது. இப்போதும் இந்தி தன் கோரப்பற்களுடன் நர்த்தனமாடிக்கொண்டு தான் இருக்கிறது. இந்தியின் பற்களைப் பிடுங்க, கம்யூனிஸ்டுகள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனவே, கழகம்தான் இதனைச் செய்தாக வேண்டும். அருமையான சந்தர்ப்பம் இது. இந்தி ஆணவத்தை மாய்க்கக் கிடைத்த நல்வாய்ப்பினை கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

## "பெரும்பான்மை" யாருக்கு?

நவம்பர் முதல் நாள் நடைபெற்ற 'சிண்டிகேட்' காரியக் கமிட்டியில், இந்திரா தரப்பினர் சமர்ப்பித்த ஒரு மனுவில், அ. இ. கா. க. - வைக் கூட்டவேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. மறுத்துவிட்ட நிஜலிங்கப்பா அ. இ. கா. க.-வைக் கூட்ட வேண்டிய அவசியம் எதுவும் இப்போது ஏற்பட்டுவிடவில்லை என்று கூறி இருந்தார். இப்போது, இந்திரா குழுவினர், கூட்டிவிட்ட அ. இ. கா. க. கூட்டத்துக்குப்பின், தானும் அ. இ. கா. க. - வைக் கூட்டப் போவதாக அறிவித்திருப்பது நகைப்புக்கு இடந் தருவதாக அமைந்திருக்கிறது. "தலையே" கொய்யப்பட்டு விடுமோ என்ற அச்சம் சிண்டிகேட்டுக்கு ஏற்பட்டுவிட்டது என்பதைத்தான் இது நிரூபிப்பதாக இருக்கிறது. அப்போதே, அ. இ. கா. க.- வைக் கூட்ட நிஜலிங்கப்பா ஒப்புக்கொண்டிருந்தால், காமராசர் அதற்கு வழிவிட்டிருந்தால் இப்போதைய அவல நிலையை ஓரளவு தவிர்த்திருக்க முடியும். அப்போதைய 'பெரும்பான்மை''யை மதியாதவர்கள், இப்போது இந்திராவின் பக்கம் "பெரும்பான்மை" போய் விட்டது என்று தெரிந்ததும், அவசரம் காட்டுகிறார்கள், அப்பாவிகள்! இந்திராமீது நடவடிக்கை எடுத்ததுபோல், இந்திரா கூட்டிய அ. இ. கா. க. - வில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களையும் முதலில் கட்சியை விட்டு நீக்கிவிட்டு, பிறகு, அ. இ. கா. க. - வைக் கூட்டினால், அது அவர்களே அறிவித்தபடி ஜனநாயக மரபாக இருக்கும். இந்திரா கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு மட்டும் "விதி விலக்கு" என்றால், "பெரும்பான்மை" பற்றி "சிண்டிகேட்" பயந்துவிட்டது என்பதைத் தானாகவே புரிந்துகொள்ள முடியும்!

# கேட்டீரா சேதி!

## "விளக்கம்" கிடைக்காது?

காமராசர் காங்கிரசின் அழைப்பை ஏற்று தமிழகத் தலைநகருக்கு வருகை தந்த திருமதி தாரகேசுவரி சின்கா, மிகப் பயங்கரமான குற்றச்சாட்டொன்றைக் கூறி இருக்கிறார். நவம்பர் முதல் நாள், பிரதமர் இந்திரா, இரவோடிரவாக, யாரும் அறியாவண்ணம் சென்னை வந்து திரும்பினார் என்பதுதான் அக்குற்றச்சாட்டு. குற்றச்சாட்டு உண்மையானால் வன்மையான கண்டனத்துக்கு மட்டுமல்ல—பலமான சந்தேகத்துக்கும் உரியதாகிவிடும் அச் செய்தி. ஆனால், பிரதமரின் அலுவலக அதிகாரிகள் இச்செய்தியை அடிப்படை ஏதுமற்ற புரளி என்று மறுத்துரைத்திருக்கிறார்கள். திருமதி தாரகேசுவரி சின்காவின் கடந்த கால உரைகளைக் கவனிக்கும்போது புரட்டுகளின் உற்பத்திச் சாலையாக அவர் இருந்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடியும். காமராசரோடு "கூடி"விட்ட பிறகு, அந்த உற்பத்தி பயங்கர வடிவம் எடுத்திருக்கிறதோ என்று நம்பவேண்டியிருக்கிறது! ஆனால் மெய்யானது என்று ஆகிவிட்டாலோ? தொடர்புடையவர்கள் நிலைமைக்கு விளக்கம் அளிப்பார்களா?

## வெற்றிப் பயணம்!

தங்களது வெற்றிகரமான 12 - நாள் நிலாவுலகப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பி இருக்கிறார்கள், இரண்டாவதுகட்ட விண்வெளிப் பயணிகளான கான்ராடு, பீன், கார்டன் ஆகிய மூவரும். முதல் தடவையைவிட, இந்த முறை, ராக்கெட் சுடப்பட்டபோதே பல பயங்கர எதிரொலிகளைச் சமாளிக்க வேண்டியிருந்ததாம். இதே போல் நிலாத் தரையிலும் கூட அம்புலித் தூசிகள் காரணமாக மூச்சு விடக்கூட சிரமம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் திட்டமிட்டபடி பயணம் மிகவும் அதிகமான அளவுக்கு வெற்றிகரமாக முடிந்தேறியது என்கிற வகையில், தொடர்புடையவர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள். எதிர்கால சந்ததியினருக்கு, நிலாவைப் பற்றிய பல புதிய சுவையான தகவல்கள் எல்லாம் இனி தரப்படும். அடுத்தக் கட்டப் பயணம் பற்றி இப்போதே தகவல்கள் தரப்பட்டு விட்டிருக்கின்றன. போகப் போக, நிலாத் தரைக்குச் செல்லும் முயற்சிகள் எளிதாக்கப் பட்டுப் போனால்கூட வியப்பதற்கில்லை.

## இந்தி மாநிலமா அது?

இந்திக்கு இங்கென்ன வேலை? என்று கேட்டிருக்கிறதாம் இந்தி மாநிலமான அரியானா! "நீதிமன்றங்களின் தீர்ப்புகளை அந்தந்த மாநிலங்களின் ஆளுநர்கள், குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று, மாநில ஆட்சி மொழியுடன், இந்தியிலும் மொழி பெயர்ப்புச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்" என்ற மத்திய அரசின் இந்தி வெறிக்குத்தான் அரியானா இப்படிக் கேட்டிருக்கிறதாம். இந்த அரியானா முழுக்க முழுக்க இந்தி பேசும் மாநிலம். 1965-லும், 1967-லும் இம்மாநிலத்தில் நடைபெற்ற தலைமை நீதிபதிகளில் மாநாட்டில் தான் இப்படிக் கேட்கப்பட்டிருக்கிறதாம். 1969-ல் கூட இதே கேள்வி தானாம்! நீதித் துறையில் இந்தியைத் "திணிக்கும்" சாதகமான தருணம் இது அல்ல என்பது அது கூறும் காரணமாம்! 1969-ம் ஆண்டின் இறுதி நாட்கள் இந்தி வெறியருக்குச் சரியான படிப்பினையாக அமைந்திருக்க வேண்டும். புத்தி பெறவில்லையென்றால் புத்தி புகட்ட வேண்டும், தமிழகம், மே. வங்கம் போன்ற மாநிலங்கள்! "புரட்சி"யை அன்றாடம் போதிக்கும் இந்திரா அரசு, இது விஷயத்தில் அக்கறை காட்டும் என்று நம்பலாமா?

முகப்பில்: சென்னை மாநகராட்சி புதிய மேயர் திரு. வை. பாலசுந்தரம்.

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 30—11—69 | இதழ் 20


## வாழ்த்துகிறோம்!

சென்ற ஆண்டு, சென்னை மாநகராட்சியின் மேயர் தேர்தல், மிகப்பெரிய பரபரப்பையும், யூகங்களையும் உண்டாக்கிக் காட்டிய போதிலும், பேரறிஞர் அண்ணா அவர்களது முன்னிலையில், எல்லாவிதமான ஹேஷ்யங்களையும் தூளாக்கிவிட்டு, மிக அமைதியான முறையில் நடைபெற்று, நாட்டவர் அனைவரையுமே ஒருவிதமான ஏமாற்றத்துக்கு ஆட்படுத்தியது. அற்புதங்கள் நிகழும் என்று எதிர்பார்த்திருந்தோர் ஏமாந்துபோயினர்.

இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த மாநகராட்சியின் மேயர் தேர்தல், பேரறிஞர் அவர்களை இழந்து விட்ட நிலையில், தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களது முன் முயற்சியால் சிறப்போடு, அமைதியோடு நடைபெற்றிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் ஓய்வுக்காக ஒளிந்துகொண்டு விட்டபின்னர் நடைபெறுகிற முதல் மேயர் தேர்தல் இது. இதன் சிறப்பறிந்து சீரிய முறையில் கடைமையாற்றப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வை. பாலசுந்தரம் அவர்கள், தம் பள்ளி நாட்கள் தொட்டே கழகத்துடன் இரண்டறக் கலந்திருப்பவர் ஆவார். இருபத்தெட்டே வயது நிரம்பப் பெற்றிருப்பவர். எட்டு திங்களுக்கு முன்பு தலைமையேற்று மண முடித்து வைத்ததைப் போலவே, மாண்புமிகு முதலமைச்சர், இப்போது மகுடமுஞ்சூட்டி வைத்திருக்கிறார்.

விளையாட்டுப் போட்டிகள், உலகமெல்லாம் புதிய பொலிவு பெற்றுக்கொண்டு வருகிற நாள் இது. விளையாட்டு வீரரான மேயர் அவர்கள், இத்துறையில் பல பதக்கங்களையும் பெற்றிருப்பவர்.

புதிய பொறுப்புக்கு வந்திருப்பதன் மூலமே, பொதுத் தொண்டுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் நிலையிலில்லாதவர். கழகத்துக்கு நல்லதொரு தூணாக இருந்துகொண்டிருப்பவர்.

இதுபோலவே, துணைமேயராக வந்திருக்கும் டி. வெங்கடேசனும், பொதுமக்களது நல்லபிமானத்துக்கு என்றும் உரியவர். மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பினை, கழகத்தின் மூலம் பெற்று வந்திருப்பவர். இனி, பதவியின் மூலம் தொண்டாற்றவிருப்பவர்.

கடந்த சில ஆண்டுகளாகவே, மேயருக்குள்ள ஓராண்டுக்கால பதவிக் காலம் போதுமானதல்ல என்று கருத்தறிவிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. ஒவ்வோராண்டும், பதவிக்கு வருவோர், பொறுப்பேற்றுக் கொண்டவுடனேயே சிலபல காரியங்களைச் செய்ய முயல்வதாக வாக்குறுதிகளை வழங்குவது இயல்பு. இயன்றவரையில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் அக்கறை காட்டுவதென்பது இயற்கைதான்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதென்பதற்கு ஓராண்டுக்கால அவகாசம் போதுமானதல்ல என்பது ஏற்கக்கூடிய வாதமேயாகும். ஒரு நகராட்சி அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்கூட மூன்று ஆண்டுக்காலப் பொறுப்பிலிருக்கும் போது மாநகராட்சியின் தலைவரும் சில ஆண்டுகள் வரை ஏன் பதவியிலிருக்கக் கூடாது.

நகராட்சி, ஊராட்சித் தலைவர்கள் தேர்வு, எந்த ஜாதி அல்லது சமூக அடிப்படையிலும் நடைபெறுவதில்லை. அப்படியிருக்கும்போது மாநகராட்சிக்கு மட்டும் இந்த முறை அவசியமா என்பதையும் அரசு ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டால்நல்லது. பலதரப்பட்ட சமூகத்தினருக்கும் பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்பது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் நீண்ட நெடுங்காலமாக இருந்துவரும் இந்த முறைமை சரியான நடைமுறைதானா என்றும் அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். எப்படியாயினும் பதவி நீட்டிப்பு விஷயத்துக்கு உடனடி முக்கியத்துவம் கொடுத்தால், பதவியில் வந்திருப்போர், தங்கள் ஆற்றலினைக் காட்டமுடியும். இருந்துவிட்டுப்போன ஒருவர், விட்டுச் சென்ற பணிகளைக் கூட முழுமையாக முடிக்க முடியாத மிகக் குறைந்த கால அளவு ஓராண்டு என்பது. குறுகிய காலத்தில், இருந்தோரின் ஆற்றலினையும் புரிந்துகொள்ள முடிவதில்லை; இருப்போரின் ஆற்றலினையும் உணர முடிவதில்லை.

என்றாலும் குறுகிய அவகாசமானாலும், அவரவரும் தத்தம் தகுதி முத்திரையினைப்பதித்தே இருக்கின்றனர். இந்த வகையில் புதிய மேயர் பாலசுந்தரம் அவர்களும், துணைமேயர் வெங்கடேசன் அவர்களும் தம் முத்திரைகளைப் பதிப்பர் என்று தாராளமாக நம்பி வரவேற்று வாழ்த்துகிறோம்.

## வருங்காலத்திலாவது...

வெளிநாடுகளில், தம் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பியிருக்கும் தமிழ் நாடு சட்ட மன்றத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள், பாராட்டுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ள கருத்து, கவனத்துக்குரியதாயிருக்கிறது.

> "வெளிநாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்கள், இந்தியத் தூதுக் குழுக்கள் அயல் நாடுகள் செல்லும்போது உதவிகரமாக இல்லை."

என்று கருத்தறிவித்திருக்கிறார். தம் பயண அனுபவத்தைக் கொண்டு மட்டுமல்லாமல், பலரது அனுபவங்களையும் தெரிந்தே இப்படிச் சொல்லி இருப்பார் என்று நம்பலாம். இது உண்மையாயின், வெளிநாடுகளில் நம் தூதரகங்கள் என்ன செய்வதற்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று கேட்பது தவறாக இருக்க முடியாது. வெளிநாட்டில் நம் தூதரகங்கள் இயங்கும் முறை பற்றி பலரும், பல சந்தர்ப்பங்களில் தம் மனக் குமுறலைக் கொட்டியிருக்கிறார்கள் அரசின் அதிகார பூர்வமான ஒரு தூதுக் குழுவை வரவேற்று, வசதிகள் கூட செய்து தர அத்தூதரகங்களுக்கு அவகாசமில்லையானால், அவற்றின் பணி பற்றி யாருக்கும் ஐயமேற்படாமலிருக்க முடியாது. எனவே, இந்திய அரசு, இதுவும் ஒரு குற்றச்சாட்டு என்று மூலையில் ஒதுக்கி விடாமல், தகுந்த ஏற்பாடுகளைச் செய்து, வருங்காலத்துக்காவது நல்லபடி இயங்க வழி வகுக்கும் என்று நம்புகிறோம்.




[5]

"போர்! போர்; கடும்போர்! சோழனின் படைகளுடன் போர்! என்ற கூக்குரலும், "எல்லை"யிலே எதிரிப் படை வந்துவிட்டதாம். குதிரைப் படை கிளப்பிய தூசி கலிங்கத்தை நோக்கி கடுகி வருகிறதாம்! வீரமணியாம், தொண்டைமானின் 'அம்பு' போன்றவனும், துரிதமாகப் பாய்ந்திடும் பரிப்படையினனும், போர் புரிவதிலே ஆர்வமிக்கவனும், அவன் புகழ், விரிந்த மலரின் மணமென எங்கும் வீசுகிறதாம்!" என்று வீதிகளிலே பேசிக் கொண்டனர். பல வீடுகளிலே விம்முங் குரலும், வியர்க்கு முகமும், நீர்வீழ்ச்சியன்ன கண்களும், வெடவெடக்கும் உடலும் கொண்ட வனிதையர் வாடிக்கிடந்தனர்.

கலிங்கனின் படைகள் அவசர அவசரமாக அணிவகுக்கப்பட்டன. வீரமணியின் குதிரைப் படையினைத் தாக்க கலிங்கத்தின் பரிப்படையினர், கிளம்பினர். கிளம்புங்காலை, மன்னன் கண்முன் பிணமானாலும் ஆகலாமேயன்றிப் பேடியாகலாமோ என்றெண்ணினர். எனவே சீறினர். செந்தூள் பறக்கக் குதிரைகள் பாய்ந்தன. எல்லையை அணுகும்போதே எதிரி அணிவகுத்து நின்ற சோழனின் குதிரைப் படைமீது கணைகளைக் கடுவேகமாக விடுத்தனர். அம்புகள் பாய்ந்து வருவதால் குதிரைகளின் உடலமும், வீரர்களின் உடலமும் தைக்கப்பட்டு படைவரிசை கலைக்கப்பட்டுவிட்டால் கலைந்து போன படையினுள்ளே புகுந்து வாட்போரிட்டு, வதைத்துவிட வேண்டும் என்பது கலிங்கக் குதிரைப்படைத் தலைவனின் கருத்து.

வீரமணி, வீரமும் யுக்தியும் அறிந்தவன், படை வரிசை கலைவது தனக்குப் பாதகமாகவும், எதிரிக்குச் சாதகமாகவுமே இருக்கும் என்பதை நன்கு உணர்ந்துகொண்டான். தந்திரமாக, எதிரியின் படையை நெருங்கி வருமாறு செய்து, போரிட வேண்டும் என்பது வீரமணியின் திட்டம். எனவே கேடயங்களால், தங்களை அம்புமாரியினின்றும் தடுத்துக்கொள்ளப் போர் வீரர்கள் பயிற்சி பெற்றிருப்பினும், யுக்தியாகப் போரிடவேண்டித்தன்படையைத் திருப்பிப் பின் நோக்கிப் போகும்படியும், ஆனால், வேகமாகச் சென்றபோதிலும் விநாடியிலே திரும்பி எதிர்நோக்கிப் பாயும் நோக்கத்தை மறக்கலாகாதென்றும் கூறி, உத்திரவிட்டான். சோழனின் குதிரைப்படைகள் பின்வாங்கி ஓடுகின்றன என்று நம்பிய கலிங்கக் குதிரைப் படைத் தலைவன் கை கொட்டி நகைத்து, "வீரர்காள்! விடாதீர் அந்த வீம்புக்காரரை" என்று கூறினான். கலிங்கப் படை களிப்புடன் பாய்ந்து சென்றது. வேகமாகப் பாய்ந்து வரும் வேளையிலே வீரமணி தனது குதிரைப் படையின் வரிசையை இரண்டாகத்துண்டித்து இடையே கலிங்கப்படை புகுவதற்கு வழி தோன்றிடச் செய்தான். முறையாகச் செய்யப்பட்ட இதனை உணராது முறியடித்துவிடுவார்கள் என்று கிலிகொண்டு, சோழனின் படை பிளந்துவிட்டது என்று கலிங்கப் படையினர் கருதி, படைவரிசை இடையே ஏற்பட்ட பிளவுக்குள் பாய்ந்தனர். பாய்ந்ததுதான் தாமதம், வீரமணி, "தாக்குவீர் கத்தியை! தாக்குவீர் எதிரியை!!" என்று கர்ஜனை புரிந்தான். உடைவாள் உருவினர் சோழ வீரர், இடையே வந்தக் கலிங்கக் குதிரைகளின் கால்களைத் துண்டிக்கலாயினர்! ஒரு வெட்டு குதிரையின் காலில்! குதிரை குப்புற வீழ்ந்

த்தும், கலிங்க நாட்டானின் கழுத்துக்கு மற்ருேர் வெட்டு! அவன் குதிரையுடன் பிணமாவான்; இத்தகைய முறையினுல், கலிங்கக் குதிரைப் படையிலே பலத்த சேதத்தை உண்டாக்கிவிடவே, மிகுந்திருந்த படை ஊருக்குள் ஓடிவிட்டது. கோட்டை வாயிற்கதவைத் தாளிட்டுக்கொண்டது. கோல் கொண்டோன் கோபக்கனல் உமிழும் கண்களுடன் அவர்களை நோக்கிக் "கோழைகளே! நானே நேரில் களம் வருகிறேன். நால்வகைப் படையும் நம்முன் கொண்டு வருக" என்று நவின்ருன். படையும் பலமாகக் குவிந்தது; கலிங்க மன்னனின் கோபம் காட்டுத் தீபோல் காணப்பட்டது. நறநறவெனப் பற்களைக் கடித்தான். அவனுடைய முகம் சிவந்துவிட்டது. கையிலே உருவிய வாளேந்தி நின்ருன். அன்று அவன் இருந்தது போன்ற வீர உருவத்துடன் அதற்குமுன் கலிங்கம் அவனைக் கண்டதேயில்லை. உறுதி கொண்டான். ஊர் அழியினும் சரியே படை முழுவதும் பாழாயினும் சரியே; உடலில் உயிர் உள்ளமட்டும் போரிடுவேன் என்று சூள் உரைத்தான். சூரனெனக் கிளம்பினுன்களம் நோக்கி.

* * *

"கரடுமுரடான பாதை! காட்டாறும் கடுவெளியும் கொண்டது. காலிடறினுல் குழியில் விழவேண்டும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சை இராது. நீரோடை காதத்திற் கொன்றுமிராது. உதடுலர்ந்து உளம் உலர்ந்து, உயிர் உலரும் நிலை! அத்தகைய கொடிய இடம்! மான்கள் தாகவிடாய் கொண்டு தத்தளித்து ஓடும், வேடுவரின் அம்புகள் வேறு பறந்துவரும். மிக்க பயங்கரமான பிரதேசம் ஆகவேதான் உன்னை அழைத்துச் செல்ல என் மனம் இடந்தரவில்லை" என்று காதலன் கூறிட "தலைவரே! முன்பு உம்மைவிட்டுத் தனியே எங்ஙனம் பிரிந்திருப்பது என்ற ஒரே எண்ணத்தால் மட்டுமே உம்முடன் வருகிறேன் என்றுரைத்தேன். நான் வரலாகாதென்பதற்காக நீர் போகும் வழிகள் பற்றிய வர்ணனையைக் கூறக் கேட்டபின், உம்முடன் வந்தே தீருவது என்று உறுதி கொண்டுவிட்டேன். என் ஆருயிரே! பயந்தேன் மிகவும்; நீர் போக இருக்கும் இடத்தின் கொடுமை என்னைக் களங்கவைத்து விட்டது. எவ்வளவு இன்னல்! எவ்வளவு இடுக்கண்! இத்தனையையும் நீர் சகிக்கவேண்டுமோ! நினைக்கும் போதே நெஞ்சம் திடுக்கிடுகிறது. ஆனுல், அத்தகைய பிரயாணத்தைத் தாங்கள் செய்கையில் பாவியேனுகிய நான் இங்குச் சுகமாக இருப்பதா! நீர் நீருக்குத் திண்டாடுவது இங்கு எனக்குப் பானகமா! நீர் கரடு முரடான பாதையிலே கால் கடுக்கச் செல்வது, இங்கு நான் சோலையில் சொகுசாக இருப்பதா! பசியின் கொடுமையை நீர் அனுபவிக்கப் பாதகி நான் இங்கு ருசியுள்ள உண்டி தின்று உடலைக் கொழுக்க வைப்பதா! பாறையிலே நீர் படுக்க, பஞ்சணையா இந்த உடலுக்கு? வேண்டாம்! கூடாது! ஒருபோதும் சம்மதியேன். உமக்கு வரும் கஷ்டத்தை நான் சரிபாதி பங்கிட்டுக்கொள்வேன். உம்மைவிடேன்; பிரியேன்" என்று காதலி கூறிவிட்டாளாம். வழியின் கேட்டை எடுத்துரைத்தால் வனிதை வர அஞ்சித் தன்னைத் தனியே போகவிடுவாள் என்று கருதிய காதலன் ஏதுங்கூற இயலாது நின்ருனும்.

நடனராணி பழந்தமிழ்ப் பெண்களின் தன்மை கொண்டவள். எனவே, போர் இப்படி இருக்கும், இன்னின்ன ஆபத்துக்கள் உண்டு என்று பிறர் கூறிடக்கேட்டு, அத்தகைய ஆபத்தான வேலையிலே தன் அன்பன் ஈடுபட்டிருக்கும் வேலையிலே, அரண்மனையிலே தான் இருப்பதை எண்ணி ஏங்கினுள்! எவ்வளவு கஷ்டமோ! என்னென்ன ஆபத்தோ! எத்தனை அம்புகள் அவர்மீது சீறிப் பாய்ந்து வருமோ? எவனெவன் வாளை வீசுவானே! வேல், வேழம், வெஞ்சின வீரர்கள் வாள், வீரரின் தோள், பலப்பல படைக்கலம், பாய்ந்தோடி வரும் பரிசுகள், இத்தனையையுங்கண்டு, வீரமணி களத்திலே இருக்கும் வேளையிலே அரண்மனை வாழ்வா நமக்கு என்று எண்ணி நடனராணி நொந்தாள். வீரமணியுடன் கொஞ்சி விளையாடிய காட்சிகள் பலப்பல மனக்கண்முன் தோன்றித் தோன்றி அவளை வாட்டின. புன்னை மர நிழலும், முல்லைப் புதரும் அல்லி நிறைந்த ஓடையும், அரண்மனை மருங்கும் அவள்முன் தோன்றித் தோன்றிப் பரிகசிக்கத் தொடங்கின. 'இங்கு உன்னைப் பிடித்திழுத்து இதழ் சுவைத்தானே, அந்த இன்ப விளையாட்டல்ல நடனம்; இப்போது மரணம் ஒருபுறம் நின்றுகொண்



டிருக்கும். அவனுடைய உயிரைப் பிடித்திழுத்து என்னை அணைத்துக் கொள்ள வா! என்று ஆர்ப்பரிக்கும்! அதன் அணைப்பிலே அவன் அகப்படக் கூடாது; ஆமாம்! அல்லியும், முல்லையும், அல்ல, அவனெதிரிலே! யானையுஞ் சேனையும்! குயில் கூவாது கோரமான கூக்குரல் கேட்கும். "அவன் களத்திலே நிற்கிறான்" என்று நடனராணியின் காதருகே யாரோ சதா கூறுவதுபோல் எண்ணிக் கொண்டு ஏங்கினாள். தனது காதலன் வீரன் என்பதும், வெஞ்சமர் பல புரிந்து, வீரக்கழலணிந்தவன் என்பதும் அறிவாள். அறிந்துமென்ன? ஆபத்து ஆபத்துதானே! போர்! போர்!! என்று ஏன் அடிக்கடி இத்தகைய பொல்லாங்கு ஏற்படுகிறது?" என்றுத் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். கண்ணிலே வேல் பாய்ந்தாலும், களத்தைவிட்டு ஓடாதவன் என்று, புகழ்மொழிக்காகப் புண்பட்டுக் கிடப்பதா! ஏன் போர் என்ற பேச்சுக்கே இடமில்லாதபடி ஓர் புது முறை அமைக்கக்கூடாது என்றும், குருதியிலே குளித்து, பிணத்தின்மேல் நடந்து, புகழ் தேடுவதை விட வேறு வழியில்லையா இந்த ஆடவர்களுக்கு! கலை, சிற்பம், காவியம் முதலியன போதாதா புகழ் தேட என்றும், ஏதேதோ எண்ணினாள் நடனராணி. அந்தப் போரின் பயங்கரம் மனத்திலே புகுந்தது போல், வேறெப்போதும் இருந்ததில்லை. பார்க்குமிடமெங்கும் போர்க்களமாகவே தென்பட்டது! எந்தச் சத்தமும், சண்டையிலே கிளம்பும் ஒலியெனச் செவிக்கு இருந்தது. யார் எதைப் பேசினாலும், போர்க்களப் பேச்சாகவே தோன்றலாயிற்று. இள நங்கையின் இருதயம் அனலிடு மெழுகாயிற்று. அரசிளங்குமரி நடனாவின் மனநிலை உணர்ந்தாள்; பரிதாபங் கொண்டாள். போர் மிக்கப் பொல்லாங்கானது என்று பேசி நடனாவின் நொந்த உள்ளத்திற்குச் சற்றே ஆறுதல் வரட்டும் என்று அம்மங்கை பேசலானாள்.

கலிங்கப் படைகளை நம் வீரர்கள் கண்ட துண்டமாக்குவர். அதிலே எனக்குத் துளியும் சந்தேகங் கிடையாது. ஆனால், போர் என்றால் கஷ்டம், கலக்கம் இருந்துதான் தீரும் இது சகஜம். அரைக்காத சந்தனம் மணப்பதேது! ஆயினும், எனக்கென்னமோ நடனம் போர் என்ற போக்கே பிடிக்கவில்லை. புகழ் வருகிறது என்ற போதிலும், புண்வந்த பிறகல்லவா புகழ்!

"ஆமம்மா! ஆபத்து முதலில், அதைக் கடந்த பின் அழியாப் புகழ். ஆன்றோர் அதைத்தானே அகமகிழ்ந்து வரவேற்றனர்."

"என்றாலும், உலகின் எழில் பாழ்பட்டு, மக்கள் வாழ்வு சிதைந்து, பல குடும்பங்களில் கண் கசிந்து புகழைத் தேடுவது உசிதமா என்று நான் கேட்கிறேன்."

"போர்க்குறிக் காயமே புகழின் காயம்!"

"போடி! போரின்றி மக்கள் வாழ்ந்தால், புகழே இராதோ! புலவரின் கவிதை புகழ் தேடித்தர வில்லையோ!"

"தருகிறது! ஆனால், புலவரும், 'புகழ் களம் புகுந்தோர்க்கே' என்று கூறினரே."

"ஏதோ புகன்றனர்! எவரோ மொழிந்தனர்! எத்தனை உள்ளம் பதைக்கிறது. ஒருமுறை போர் என்றதும், இதோ வீரமணி, களம் புகுந்தது முதல் நீ விழ்முறுத விநாடி உண்டா?

"என்னை மன்னிக்க வேண்டும், தேவி! நான் கலங்குவது உண்மையே! அந்த வீரனுக் கேற்றவளல்ல நான்; கோழைத்தனம் என் உள்ளத்திலே கூத்தாடுகின்றது."

"இயற்கைதான் தோழி! எனினும் அஞ்சாதே! வீரமணி வெற்றி மாலையுடன் வருவான். உனக்கு மாலையிடுவான். நம் படை பலம் நீ அறியாததா? இதே நேரத்தில் கலிங்கத்தில் நடக்கும் கடும் போரிலோ எதிரிகள் தோற்று ஓடுவர். நமது படை முன், எத்த மன்னனின் படை நிற்கமுடியும்?"

அரண்மனையிலே இந்தப் பேச்சு! காஞ்சியிலே மன்னன், கோபங் குறையாது வீற்றிருந்தான். களத்திலே கடும்போர் நடந்து கொண்டிருந்தது.

இருநாட்டுப் படைகளும் கடலைக் கடல் எதிர்ப்பதுபோல், ஒன்றை ஒன்று எதிர்த்தன. உக்கிரமான போர்! உருண்டன தலைகள்! மிரண்டன கரிகள்! பதைத்தன பரிகள்! பாரகம் செங்குருதி மயமாயிற்று! பகல் இரவு போலாயிற்று. பட்டினமும் புறமும் காட்டொலி! பயங்கரமான போர் நடந்தது.

கடலிலே அலைகள் பாய்ந்து வருவதுபோல், குதிரைப் படைகள் ஒன்றின்மீதொன்று, நுரை கொழிக்கும் வாயுடன் பாய்ந்தன. மலைகளை மலைகள் தாக்குவது போலிருந்தது. மதங்கொண்ட யானைகள் ஒன்றை ஒன்று தாக்குவது, தேர்களைத் தேர்கள் தாக்கின, மேகங்கள் ஒன்றோடொன்று மோதுவது போல், மின்னல் ஒளிபோல் வாள்வீச்சும், வேல் வீச்சும்! புயற்காற்றிலே சிக்கிய மரங்கள் கீழே சாய்வதுபோல், வில்வீரர்கள் விடுகணைகள் வீரர்களை வீழ்த்தின. வெட்டி வீழ்த்தப்பட்ட யானைகளின் உடல்களைக் கரையாகக் கொண்டு, வீழ்ந்து போன வீரர்களின் குருதி ஆறென ஓட, அதிலே புதுவெள்ளம் அடித்துவரும் பல பொருள்போல், தலையறுபட்ட உடலம், கைகால் துண்டிக்கப்பட்ட உடலம், சிரங்கள், கைகள், கால்கள், குடல்கள், யானையின் துதிக்கைகள், குதிரையின் உடல் முதலியன மிதந்தன. இரு கையிழந்தவர், எதிரிலே மிரண்டு ஓடிவரும் யானையின் காலடியிலே சிக்கிக் கூழாக்கப்படுவர், குதிரை ஓடும்; கணை பாயும்; கழுத்தறுந்து ஒருபுறம் வீழும் உடலம் குதிரைமீது சாய்ந்து; கீழே இரத்தத்தைச் சொரியும்! கணைகளால் கண்ணிழந்த யானைகள், காலிடறி இரத்தச் சேற்றிலே வீழும், கையறுபட்ட வீரர்கள், கண் இருப்பதால் களத்தின் கோரத்தைக் கண்டும், ஏதுஞ் செய்ய இயலாததால், "ஐயோ!" என்று ஓர் முறை கூவுவதும், எதிரி வரக்கண்டால், கையிழந்ததைக் கருதாது, 'விடாதே! பிடி! வெட்டு! வீழ்த்து!' என்று கூவுவதுமாகச் சில நேரம் இருந்து பின்னர் உயிர் துறந்தனர். சபையிலே, மகிழ்ந்தோர் அளித்த மாலையுடன் விளங்கும் புலவர்கள்போல், எதிரியின் யானை தன் துதிக்கையால் வீரனைத் தூக்கிச் சுழற்றி கழுத்தை நெறிக்க, அந்த நேரத்திலும் நெஞ்சுறுதியுடன், வாள்கொண்டு அவன் துதிக்கையைத் துண்டிக்க, அறுபட்ட துதிக்கை மாலைபோல் அவன் கழுத்திலே இருக்க, வீரன் கீழே வீழ்ந்திட, யானையின் கால் அவனை நசுக்க, இறந்துகிடக்கும் வீரர்கள் பலர்!

"மன்னன் மிக்கவல்லமைசாலி! அவன் படைத் தலைவன் மிக்க திறமைசாலி! மிக்க வீரமுடையன சோழனின் படைகள். களத்திலே வெற்றி உண்டு.

கலிங்கப் போரிலே வெல்வான். ஆனால்.........''என்று ஓர் தவசி காஞ்சியில், ஒரு வீதி ஓரத்தில் நின்றுகொண்டு எதிரே கூடியிருந்த மக்களிடைப் பேசலானான்.

போர்ச் செய்திகள் கேட்கக் கூடினர் மக்கள். தவசி ஏதோ கூறுவது கேட்க, மனம் தாளவில்லை.

"ஆனால்......என்று இழுப்பானேன்'' என்றான் கூட்டத்திலே ஒருவன்.

"ஆனால்! ஆம், புறப்பகைவர்களை வெல்கிறான் மன்னன்; அகப் பகைவர்களை அழிக்கும் வகை தெரியான்'' என்றார் தவசி.

"வேதாந்தம் பேசுகிறீரோ? வேலெடுக்க வகை தெரியாதார், நூல்கொண்டு, ஏதோ பிழைப்பர் என்பது தெரியும் எமக்கு. உமது சரித்திரத்தை இங்கு காட்டாதீர்'' என்றனர் கூட்டத்தில் பலர்.



தவசி சிரித்துக்கொண்டு, "வேற்படையாளரே! இந்த வேதாந்தி பேசுவது வீண் என எண்ணாதீர். நாங்கள் வளர்க்கும் ஓமத் தீயைவிட, நாட்டுப்பற்று உள்ளவர் மனத்திலே எழும் கோபத் தீயே தேவருக்கும் மூவருக்கும் ஏற்றமுடையது. நான் வீரத்தைக் குறை கூறினேனா! வெற்றி சோழனுக்கில்லை என்றுரைத்தேனா! இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? நான், சோழன் வெளிநாடுகளிலே வெற்றிபெற்றுப் பயன் என்ன, சோழ மண்டலத்திலேயே பகைவர்கள் உண்டு; அவர்களை ஒழிக்கவில்லையே, என்றுதான் கூறுகிறேன்'' என்றார்.

"விந்தை! எமது மன்னனுக்கு, உள்நாட்டில் பகைவரா! ஓய்! யோகியே! ஊரார்முன் உளறுகிறீர்'' என்றனர் மக்கள்.

"உண்மையை உரைத்தேன். அது உளறுவதாக உமக்குத் தோன்றுகிறது; ஊர் அழிய அழிய, உமது மன்னனின் புகழ் வளருகிறது. நீர் களிக்கிறீர்; உமக்குக் களிப்புப் பிறக்க அங்கே, போர்க்களத்திலே கண்ணீரும் இரத்தமும் கலந்தோடுகிறது ஆறுபோல். இங்கு நீங்கள் வெற்றி விழா கொண்டாடப் போகிறீர்கள். அங்குப் பேய்கள் உமது தோழர்களின் உடலை விருந்தாக உண்டுக் கூவும்'' என்றான் முனிவன்.

"பேயும் பூதமும்! பிதற்றுகிறான்'' என்று நகையாடினர் மக்கள்.

"தானென்ற உலகத்தில் சிறிது பேர்கள்,
சடைபுலித்தோல் காஷாயம் தாவடம் பூண்டு
ஊனென்ற சிவபூசை தீட்சை என்பார்
திருமாலைக் கண்ணாலே கண்டோ மென்பார்,
கானென்ற காட்டுக்குள் அலைவார் கோடி
காரணத்தை யறியாமல் கதறுவாரே!''

என்றுரைக்கும் மனப்பான்மை கொண்டு, வீரத்தையும் மானத்தையும், உழைப்பையும் மதித்துவாழ்ந்து வந்த தமிழர்கள், வஞ்சகக் கருத்துக்களையும், கோழைக் குணத்தையும் வரவேற்பரோ! மானிடம் என்பதே வாள்! அதை வசமாகக் கொண்டிட இரு தோள்! மானிடம் என்பது குன்று; அதன் மீது தமிழர் நின்று வாழ்ந்த காலம் அது. அவர்கள் அக்குன்றின்மீது நின்றிருந்த கோலம், மாற்றாரின் கண்களை உறுத்திற்று. காய்ந்து கருகிய வெளியையும், கற்பாறையையும். கடுஞ்சுனையையும், கண்டு கவலையை உண்டு, கால்நடைகளை மேய்த்துக் கொண்டு வாழ்ந்துவந்த ஆரியரின் தேய்ந்த வாழ்வைக் கங்கைக் கரையின் பசும்புற்றரையும் மணி கொழிக்கும் வயலும், வயல்மருங்கே அமைந்திருந்த தோட்டங்களும் துலக்கிற்று. பச்சை கண்டு இச்சை கொண்ட நச்சு நினைப்பினர், கச்சையை வரிந்து கட்டி, கட்கமெடுத்துப் போரிட்டு வாழும் தமிழரைப் பின்னர் கண்டனர். தங்கக் கோட்டைகளிலே வைர மணிகள்போல் ஒளிவிட்டு வீசி வாழ்ந்த தமிழரிடை, போரிடுவதோ இயலாது, ஆனால் என்ன? வீழ்த்த வீரம் இல்லையெனினும், வஞ்சகமெங்கே போயிற்று! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாம். ஆரியருக்குக் காய்ந்த புல் — தர்பையே — தமிதரை, தந்திரத்தால் வீழ்த்த ஆயுதமாயிற்று. "நாங்கள் இருக்கும் விதங்கண்டு நகைப்பீர்தமிழரே! எமது தேவர்கள் மகா பராக்கிரமசாலிகள்! மழை பெய்வது எமது வருணதேவனால்! நெருப்புக்கு எமது அக்கினிபகவானே கர்த்தா! காற்றுக்குக் காவலன் எமது வாயு!'' என்று கட்டுக்கதைகளை விட்டனர். தமிழரிலே, தெளிவைத் துறந்தோர் நம்பினர், சந்து கண்டதும் நுழையும் சர்ப்பம்போல், மூடமதி இதுதான் தக்க சமயமெனக் கண்டு, தமிழரின் உள்ளத்திலே புகலாயிற்று. அந்த நிலை வந்ததாலேயே தமிழரிடம், ஆரியமுனி ஆண்மையை இகழ்ந்து பேசிட. அரசனைப் பழித்திட, அந்த லோகம் இந்த லோகம் என்று சிரித்துப் பேசிடத் துணிந்தான். அன்று தமிழ்ச் சமுதாயம் தலை குனிந்திருக்கவில்லை! சமுதாயத்திலே சிலரே சாய்ந்திருந்தனர். எனவே ஆரிய முனிக்குப் பேசிடல் மட்டுமே

எளிதாயிற்று! நம்பவைத்தல் முடியாது போயிற்று. எனினும் விதை தூவிட்டு, வானத்தை நோக்கிடும், வறண்ட நிலத்துக்காரன்போல், ஆரியன் தனது சரக்கை அவிழ்த்தான்.

"உமது மன்னன், கலிங்கப் போரிலே வெல்வான்; கலகப் போரிலே என் செய்வான்? நான் துறவி; எனக்கு மன்னர் கூட்டமே துரும்பு. எனவே நான் துணிந்தே கூறுகிறேன். பட்டத்துக்கு வார்சுப்படி வரவேண்டிய மன்னன் வந்திருப்பின் இத்த கைய அமளிகள் ஏற்பட்டிரா. தானுண்டு, தன் அரசுண்டு என்று இருந்திருப்பான். இவனோ, எடு வாளை! வீசு தலையை!! என்று கூறினவண்ண மிருக்கிறான். கொலை! படுகொலை! கோரம்! உயிர் வதை! நடந்தபடி இருக்கிறது. யாவும் இன்னொருவனின் புகழ் வளர! இதற்கு எவ்வளவு கொலை! பாப மூட்டையைச் சுமந்துகொண்டிருக்கிறான் பார்த்திபன்!" என்றான் யோகி!

கொலையா! கொலை என்றால் கொல்லுவது என்பதுதானே பொருள்! இதிலே பாபமும் புண்ணியமும் என்ன தொக்கிவிட்டது. தொந்தி சுமக்கும் தந்திரவாதியே! உலகிலே, போர்க்களம் ஒன்றில் தான் "கொலை" நடக்கிறதோ! இவ்வளவு காருண்யம் பேசி கண்ணீர் வடிக்கிறீரே, உமதுகாலடியிலே சிக்கி சிதைந்துபோன சிற்றெறும்பு, புழு, பூச்சி எவ்வளவு, அவை கொலையல்லவா? பாபமல்லவா? போர்க்களந்தானா கொலைக் களம்! உலகமே அது தானே!! சாவது, சாகடிக்கப்படுவது என்பவை உலகிலே விநாடிதோறும் நடைபெறும் நிகழ்ச்சிகளல்லவா! காட்டிலும், நாட்டிலும், குருவிக் கூட்டிலும், குகையிலும், புற்றிலும், கடலிலும், விண்ணிலும், மண்ணெங்கும் கொலை நடந்துகொண்டே இருக்கிறது. பாபம், புண்ணியம் என்ற மொழி பேசி, மன்னனை ஏசிடத் துணிந்தீரே, கொலை நடவாத இடம் எது? யோகிகளின்பர்ண சாலைகளிலே, பக்குவமாக வாட்டித் தேனில் தொட்டுத் தள்ளப்படும் மானிறைச்சி, புண்ணியத் துண்டுகளா! பசுங்கன்றின் இறைச்சியைப் பதம் பார்க்கும் முனி சிரேஷ்டர்கள் பாப பாயசத்தைப் பருகினவர்களன்றோ. எமக்குத் தெரியும் எது முறை என்று! உமது கற்பனை உலகில் நாங்கள் குடி ஏறிடோம். கட்டும் உமது கடையை. இல்லையேல் நடவும் மன்னரிடம். முடியுடன் விளையாடுகிறீர்; தெரிந்தால் பிடி சாம்பலாக்கப்படுவீர்! கெடுமதி கொண்டு, கலிங்கனின் கைக் கூலியைத் தின்று, கலக புத்தியைப் புகுத்த வந்தீர், போர்க்குண மக்களிடம் பூனைப் பேச்சு பேசுகிறீர்" என்று கூட்டத்திலே ஒருவன் கொதித்துக் கூறினான். ஆரியன், "ஆத்திரம் விடுக! சந்தேகம் கொள்ளாதீர். நான் சாத்திரத்தை ஓதினேன், வேறில்லை. களத்திலே நடப்பதை நீங்கள் ஆதரிப்பதானால், நான் குறுக்கிடப் போவதில்லை" என்று கூறினான் விபரீதம் விளையாதபடி இருக்க, மக்கள், "வந்தான் வழிக்கு" என்று கூறிக்கைகொட்டி நகைத்தனர். பின்னர் 'ஓய் ஏதோ பேய் என்று சொன்னீரே, அதை உடனே களத்துக்கு அனுப்பும். நல்ல விருந்து கிடைக்கும்" என்று கேலி செய்தனர்.

களத்திலே, சோழனின் படைவீரர்கள், விழியினின்று கனலையும், உடலிலிருந்து குருதியையும் சொரிந்து, வெடுவெடென வீரச் சிரிப்பு சிரித்துத் தமது நகை, நடை, இடி, பிடியால், கரிகள் திகைக்கும்படி காட்சியளித்தனர். மீனவர் மிரண்டதும், சேரர் மருண்டதும், விழிஞர் விரண்டதும், வந்தவர் செத்ததும் எம்மாலாயிற்றே என்று, முன்பு தாங்கள் முறியடித்த கூட்டத்தினரின் வரிசையைக் கூறி, வாளை வீசிப் போரிட்டனர், குலோத்துங்கனின் வீரர்கள்.

வாளோடு வாள் கலகலவெனப் பேச, கடகடவெனத் தேர்கள் உருண்டோட, யானைகள் மிரள, குதிரைகள் கதற, கோரமாகப் போர் நடந்தது. நெருப்போடு நெருப்பு, மலையோடு மலை, கடலோடு கடல் என்பதுபோல், படையுடன் படை உக்கிரமாக மோதிக்கொண்டன. யானையின் துதிக்கையை எதிரி யானையின் துதிக்கை பற்றி, முறுக்கி ஒருபுறம் இழுத்ததும், தந்தத்தால் மண்டையைக் குத்த காலால், குத்திடும் கரியைக் குப்புறக் கவிழ்க்கக் குத்துண்ட யானை முயல்வதும், எதிர்ப்பட்ட போர்வீரர்களை ஒருபுறம், யானைகள் கரகரவென இழுத்து, எலும்புகளை மளகளவென முறித்துக் கீழே வீழ்த்திக் காலால் தேய்ப்பதும் ஆகிய காட்சிகள், தமிழரையன்றி மற்றவரைக் கலங்கவைக்கும் தன்மையினதாக இருந்தன. நெருப்பைப் பரவச் செய்யும் காற்றென, குதிரைப் படை களத்திலே, அங்கும், இங்கும், எங்கும் சுழன்று சுழன்று சுற்றிச் சண்டமாருதம் மரங்களைச் சாய்ப்பது போல், எதிரிகளைச் சாய்த்து அழித்தது. வீரமணியின் திறனை வியக்காதார் இல்லை. "அதோ வருகிறான்! இதோ பாய்கிறான்!" என்று எதிரிகள் மிரண்டு கூறினர். கலிங்கப் படையிலே பெரும் பகுதி அழிந்தது! மற்றது மிரண்டது! மண்டியிட்டாலன்றி மீள மார்க்கமில்லை! மார்தட்டிய மன்னன் களத்திலே இல்லை! கற்கோட்டையை நாடிச் சென்றான். மீசையை முறுக்கிய மந்திரி கேட்பாரற்றுக் கிடந்தான். வேழங்கள் பிணமாயின. குதிரைகள் குடலறுபட்டுக் குவிந்து கிடந்தன! இரதங்கள் தூளாயின! படை வரிசை பாழாயிற்று! வாளேந்திய கரங்கள் குறைந்தன! வேதனைக் குரல் அதிகரித்தது! வெற்றி சோழனுக்கு! தொண்டைமானின் தோள்கள் பூரித்தன! வீரமணியின் முகத்திலே ஒளி வீசிற்று! வென்றோம்! வென்றோம்! என்று சோழனின் சோர் விலாச் சூரர்கள் முரசு கொட்டினர், கலிங்கர், களத்தை விட்டோடலாயினர்! மான் வேட்டையாடும் வேங்கைகளாயினர் தமிழர்! கலிங்கப் போர் சோழனின்கிரீடத்துக்கு மற்றோர்வெற்றிமணிதந்தது. ஆரிய முனி குறிப்பிட்ட பேய்கள், களத்துக்கு வரக் கூடுமானால் வயிறு புடைக்க உண்டிடப் பிணங்கள் குவிந்துகிடந்தன.




## இலக்கியம்

இலக்கியம் பயில்வது இளைஞர்களுக்கு வளர்ச்சியளிக்கும் முதுமைப் பருவத்தில் விருந்தாக விளங்கும், செழுமையை அலங்கரிக்கும், வறுமையில் ஆறுதலளிக்கும், வீட்டில் இன்பமளிக்கும், வெளியில் எங்கே செல்லவும் உரிமை யளிக்கும்.

—சிசரோ.

# கைம்மாறு வேண்டாக் கடப்பாடு

கரு: எம். கே. காந்தி

உரு: தஞ்சை துறவி

**பொன்னுக்கும் பொருளுக்கும் மனிதன் எப்படியெப்படி எல்லாம் பாடுபட்டுக்கொண்டிருக்கிறான்! ஆனால் காந்தியடிகள் மட்டும் விதிவிலக்காக இருந்திருக்கிறாரே... நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டாமா?**

திரைகடல் ஓடித் திரவியம்தேடும் பொருட்டு தென்னாப்பிரிக்கா சென்றிருந்த நான் அங்கு நிறவெறி தலைதூக்கி நிற்பதனைக் கண்டேன். வெள்ளையர்களால் இந்திய மக்கள் விலங்குபோல் நடத்தப்படுவதனைப் பார்த்தேன். மனித இதயம்படைத்த யாரும் அந்தக் கொடுமையினைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. அப்படியென்றால் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த வெள்ளையர்கள் அத்துணைப்பேருக்கும் அறுவைச் சிகிச்சை மூலம் ஆட்டு இதயங்களா பொறுத்தப்பட்டிருந்தன? பழக்கப்பட்டுவிட்டால் எது நியாயம்? எது அநியாயம்? என்று தெரியாமற் போய்விடும்போலும்! வெள்ளையர் போக்கினைக் கண்டித்தேன். இடர் பல விளைந்தன என்றாலும் "எதையும் தாங்கும் இதயம்" இருந்தமையால் அனைத்தையும் தாங்கிக் கொண்டு அமைதி வழி போராடினேன். என் பக்கமும் ஆட்கள் சேர்ந்தனர். ஆயுதங்களைத் தாங்கிப் பழக்கப்பட்ட அவர்களுக்கு ஆயுதபாணிகளைச் சமாளிப்பது எளிதாக இருந்திருக்கலாம். அஹிம்சைவாதியாகிய என்னைச் சமாளிப்பது சற்று கடினமாகவே இருந்திருக்க வேண்டும். இந்த நேரத்தில் போர் தொடங்கியது. ஒத்துழைப்பை அவர்கள் என்னிடம் எதிர்பார்த்திருக்க முடியாது. என்றாலும், "கூரைபற்றி எரியும்போது பிடுங்கினது ஆதாயம்" என்ற போக்கினன் அல்ல நான். எனவே என்னுடைய போராட்டங்களை நிறுத்திக்கொண்டு முழு ஒத்துழைப்பினையும் அவர்களுக்கு நல்கினேன்.

போர் ஓய்ந்தது. புனிதத் தொண்டினைத் தொடர விரும்பினேன். என்றாலும், தாய்நாடு என்னை 'வா, வா' என்று அழைத்தது. விடைபெற விரும்பினேன். அன்பர்கள் அதற்கு இசைந்தார்கள் இல்லை தாய்நாடு திரும்புவதே தக்கது; குடும்ப நண்பர்களும் அதனையே வற்புறுத்துகின்றனர், என்றதும் ஒருவாறு இணக்கம் தெரிவித்தார்கள் என்றாலும், நிபந்தனை ஒன்றினை என்முன் வைத்தார்கள். "நான் தாய்நாடு திரும்பலாம்; ஆயினும் எனது சேவை, தேவை எனச் சொல்லி ஆப்பிரிக்காவிற்கு மீண்டும் அழைக்கப்பட்டால் நான் வந்து தீரவேண்டும்" — கடுமையான நிபந்தனையே ஆயினும் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

"ஆண்டவன் என்னை அணைத்திட்டான் — அவன்
அன்புச் சரடால் பிணைத்திட்டான்
அவனின் அடிமை நானன்றோ! — இனி
ஐக்கியம், ஐக்கியம், ஐக்கியமே!"

என்று மீராபாய் பாடினாள் நானும்,

"ஆப்பிரிக்க இந்தியர் அணைத்திட்டார் — அவர்
அன்புச் சரடால் பிணைத்திட்டார்
அவரின் அடிமை நானன்றோ!"

எனப்பாடவில்லையே ஒழிய நிலைமை அதுவாகத்தான் இருந்தது. மேலும் "மக்கள் குரலே மகேசன் குரல்!" என்பவன் நான். அவர்கள் இட்ட கட்டளையை ஆண்டவன் இட்ட கட்டளையாகவே கருதியேற்றுக் கொண்டு இந்தியா திரும்புகின்ற முயற்சியில் ஈடுபட்டேன். புறப்பட ஆயத்தமாகின்ற செய்தி கேட்ட புனிதத் தொண்டர்கள், ஆங்காங்கே விடைபெற்று விழாக்களுக்கு ஏற்பாடு செய்தனர். விழாக்களில் "பரிசுகளும் பணமுடிப்புகளும்" வழங்கப்பட்டன.

1896 ஆம் ஆண்டென்று கருதுகிறேன். இது போன்ற விழாக்கள் பல நடத்தப்பட்டிருக்கின்றன. "பரிசுப் பொருள்களும் பணமுடிப்புகளும்" தரப்பட்டிருக்கின்றன. ஆயினும் இம்முறை அவர்கள் கொட்டிய அன்பு மழையும் கொடுக்கப்பட்ட பரிசுப் பொருள்களும் என்னைத் திகைக்க வைத்தன. தாராளமாகக் கொடுக்கப்பட்ட தங்க, வெள்ளி நகைகளையும் வாரிவாரி வழங்கப்பட்ட வைர, முத்து மாலைகளையும் பெற்றுக்கொண்டு வீடு வந்தேன்.

உள்ளத்தில் மகிழ்ச்சியில்லை. ஒருவகையான மந்தவுணர்வே தலை தூக்கி நின்றது. 'இவைகள் அனைத்தையும் பெறுவதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்னை நானே கேட்டுக்கொண்டேன். 'கைமாறு வேண்டாக் கடப்பாடு' என்ற சொற்றொடர்க்குத்தான் என்ன பொருள்? குழம்பிய நிலையில், அறைக்குச் சென்றேன்; அயர்ந்துறங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தேன்; பொழுது போனபாடில்லை, அறைக்குள்ளாகவே அங்குமிங்கும் நடந்தேன். கால்வலியுற்றதே ஒழியக் கண்ட பலன் ஏதுமில்லை. விரும்பிக்கொடுத்தவற்றைக் கொள்ளவோ, தள்ளவோ முடியாத நிலை. உண்மைக்குமாற்று ஏது? உழைப்புக்கு ஓய்வு ஏது? என்பதனாலன்றோ உழைத்தோம்; உழைக்கின்றோம் விண்ணின் மழைபோல; மண்ணின் அலைபோல; அதற்கா இத்துணைப் பாராட்டும் பரிசும்! கடமையை உண்மையாகவே பாராட்ட விரும்புகின்றவர்கள் தங்கள் கடமைகளையல்லவா உடனடியாகத் தொடர வேண்டும்.

விலையுயர்ந்த அணிமணிகளை வீட்டில் வைத்துப் பழக்கப்படாத எங்கள் மனம் அவற்றினை எப்படி ஏற்க இடம் தரும்? மக்களை அழைத்து மன நிலையை உணர்த்தினேன். சேர்ந்த பொருள்கள் அனைத்தையும் "சேமநிதி"யாக்கி அங்குள்ளோர் நலம் பேண அவாவுறுவதாய்ச் சொன்னேன். உருப்படியான ஏற்பாடென உள்ளம் பூரித்தனர். "யான் கண்டனையர் என் இளைஞரும்" என மகிழ்ந்தேன். 'அன்னை' பா 'இசைவாளா?' என்றேன். 'எங்கள் பொறுப்பு.' என்றனர் 'சொல்லுதல் யார்க்கும் எளிய.' என்றேன். 'எண்ணியர் எண்ணியாங் கெய்துவர்' என்றனர். 'திண்ணியராகப் பெறின்' என்றேன். 'திடமாக நம்புகிறோம்' என்றனர். உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே வந்த "பா" நொந்த வுளத்தினளாய்க் காணப்பட்டாள்; கண் விழித்திரவில் கடும்பணியாற்றியிருப்பாளென எண்ணிக்கொண்டேன். உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு, 'உனக்கொரு செய்தி' என்றேன். 'எல்லாம் தெரியும்'— வெடுக்கென மொழிந்த சொற்கள்,

திடுக்கிட வைத்தன என்னை. "நீங்களும் உங்கள் பிள்ளைகளும் வேண்டுமானால் 'வெள்ளியா?—வேண்டாம்; கொள்ளி பட்டால் வைரம் சுப்பை மேட்டுக் கரியாகும்; தங்கமா? அது தங்குமா?" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கலாம்; நம் வீட்டிற்கு வருகின்ற பெண் பிள்ளைகள் கூடவா அவைகளை அணிந்து மகிழ ஆசைப்படாமல் இருப்பார்கள்?" கேள்விக் கணைகளைத் தொடுத்தாள். அடக்கி வைத்துக் கொள்ளாமல் ஆவலினையும் அதன் விளைவாய் எழுந்த ஆத்திரத்தினையும் காட்டிக் கொண்டது நல்லதுதானே? 'பா' பதிலுக்குக் காத்திருப்பது தெரிந்தது. "நாடகமே உலகம்! நாளை நடப்பதை யாரறிவார்?" என்றெண்ணினாளோ என்னவோ தெரியவில்லை. "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்!' என்ற பழமொழியின் கருத்தினை ஒருவேளை தவறாகப் புரிந்துகொண்டிருந்தாள் போலும்!

வினாக்களுக்கு விளக்கமளிக்காவிட்டாலும் விடை சொல்லித்தீர வேண்டுமல்லவா? "அப்படிப்பட்ட மருமகப் பெண்கள் நம் வீட்டிற்குத் தேவையில்லை." என்றேன். அத்தோடு நிறுத்தியிருந்தால் 'பா' ஒருவேளை பதில் பேசாமல் இருந்திருப்பாள். வம்பினை விலைக்கு வாங்குவது போல் வார்த்தைகளைக் கூடுதல் ஆக்கிவிட்டேன். பிள்ளைகள் சிறு பிள்ளைகள் தானே! பண்ணும்போது பார்த்துக்கொள்ளலாம்; விருப்பப்பட்டால் நானே வாங்கித்தருகிறேன். கூறியதுதான் தாமதம்; கோபம் கொப்பளித்துக்கொண்டு வந்தது "பா"விற்கு. 'கட்டிய மனைவியின் காதுக்குக் கம்மல், கழுத்துக்கு வைர நெக்லஸ், இடைக்கு ஒட்டியாணம், இருகைகளுக்கும் வளையல்; அட, அட. அட! அத்தனையும் வாங்கிப் போட்டுப்பார்த்து, பூட்டிப்பார்த்துப் பூரித்தவர்களாயிற்றே! மருமகப் பிள்ளைகளுக்கும் செய்யாமலாபோய் விடுவீர்கள்! கூறினாள்; அல்ல, அல்ல! குமுறும் அவள் நெஞ்சம் கொட்டிற்று வார்த்தைகளை. நகைகள் நான் புதிதாகப்பூட்டி மகிழவில்லையென்றாலும் தாய் தந்தையர் போட்டவற்றைத் தட்டிப் பறிக்காமல் இருந்திருக்கலாம் என்றெண்ணினாள் போலும்! எண்ணியதற்குக் கூடக் காரணம் அணிமணிகள் மீது அவளுக்கிருந்த ஆசையாய் இருந்திருக்க முடியாது. 'விரைந்து சென்று விற்றற்குரியர்' பட்டியலில் தனது கணவர் பெயரும் இடம் பெற்றுவிடக்கூடாதே என்றவள் எண்ணி இருந்திருக்க வேண்டும். என்னென்னமோ சொல்லி எப்படி எப்படியோ அவளைச்சமாளித்தேன். இறுதியில் அனைத்தையும் தருவதற்கு ஒத்துக்கொண்டாள்; ஆயினும் வணிகர்கள் தனக்கென வழங்கிய வைரமாலை ஒன்றினை மட்டும் தர மறுத்துவிட்டாள். "எனக்காகத் தந்ததுதானே?" என்றாள், "உனக்காகத்தான் என்றாலும் உடையவன் நான்" என்றேன்.

"உங்கள் தொண்டு சிறக்க உடன் ஒத்துழைத்தவள் நான்! அர்த்த ராத்திரியிலும் அடுப்பு மூட்டியது உண்டு. உடன் பத்துப் பேர் வந்தால் ஒப்புடன் முக மலர்ந்து உணவு பரிமாறியது உண்டு. நோயாளிகளை அழைத்து வருவீர்கள்; நோகாமல் பணிபுரிவேன். பெருவியாதி படைத்தவராயிருப்பார்; பெருமையோடு வரவேற்பேன்; இப்பொழுது கூறுங்கள், என் பணி இளைத்ததா? சளைத்ததா?"—குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டாள். எனக்கு ஆத்திரந்தான் என்றாலும், அடங்கிக்கிடந்த தாய்க்குலம் ஆர்பரித்தெழத் தொடங்கிவிட்டதென்பதனை எண்ணியபோது ஒருவகையான உள்ள அமைதி. அடம்பிடித்தாள் "பா" எனினும் என் உள்ளம் இடம் கொடுத்தபாடில்லை. "வைரமுடைய நெஞ்சு வேணும்; இது. வாழு முறைமையடி பாப்பா!" என்றபடி திட நெஞ்சம் கொண்ட நான் எனது திட்டத்தை நிறைவேற்றினேன். கட்டிய மனைவியின் கசப்பைச் சிறிது தேடிக்கொண்டேன் என்றாலும் நிரந்தர அமைதி என் நெஞ்சிற் குடிபுகுந்தது. செய்தது சரியென என் சிந்தை மகிழ்ந்தது. நான் மட்டும் சிறிது சபலத்திற்கு ஆட்பட்டிருந்தாலோ அன்றி, மனையாட்டியின் நிலை கண்டு மனம் கொஞ்சம் நெகிழவிட்டிருந்தாலோ அமைதி பெறாது. நெஞ்சம் அவதிக்கு ஆளாகியிருந்திருக்கும். கைமாறு வேண்டாக் கடப்பாடு யாண்டும் வேண்டும். அனுபவத்தின் வாயிலாக அறுதியிட்டு உறுதியாகச் சொல்லுகிறேன்:

"பரிசும் பணமுடிப்பும்" தொண்டன் ஒருவனுக்குத் தூசாகத் தோன்றிலன்றி தொல்லுலகு தழைக்க ஆற்றும் தூயபணி தொடராது, படராது.

"பண்புடையார்ப் பட்டுண்டுலகம்—
அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

★

---

## சிந்திக்க வேண்டும்!

—மு. வாணி

இற்றைநாள் மக்களின் வாழ்க்கை தன்னில்,
இனிதான ஓரிடத்தைச்; சிறப்பிடத்தைப்
பெற்றுள்ள பலவற்றுள் ஒன்று என்றே
பேசுதற்கு உரித்தாகும் திரைப்படந்தான்!
உற்றதெனில் அத்தகுதி அதற்கு ஏற்ப
உயர்ந்திடவே வேண்டுமன்றோ திரைப்படங்கள்?
சற்றேனும் நம்நாட்டுப் பண்புக் கொவ்வாச்
சகதிநிகர் கருத்துகளைப் பரப்பலாமோ?

தீவிரமாய் ஒருகருத்துப் பரவுதற்குத்
திரைப்படமே மிகப்பெரிது உதவும் போதில்
ஓவியமாய் அப்படத்தின் காட்சி நம்மின்
உள்ளத்தில் தன்கூவட்டைப் பதித்தல் கூடும்!
பூவினைப்போல் மென்மையுளச் சிறுரின் நெஞ்சோ
பொலிவுதரும் படக்காட்சி தன்னில் முற்றும்
தாவிவிடும்! தாமதுபோல் நடக்கத் தூண்டும்;
தரம்பிரித்து நலந்தீமை அறிந்திடாமல்!

நற்கருத்துப் பரவுவதால் தீமையில்லை;
நாட்டிற்கும் வீட்டிற்கும் கெடுதலில்லை.
துர்க்குணத்தை வளர்க்கின்ற கதைகள், பாடல்,
தூய்மைமிகு ஒழுக்கத்தைக் குலைக்கும் காட்சி,
பற்பலவாம்! இந்நாளில் வரும்படங்கள்
பார்ப்பதற்கும் அருவருப்பை யூட்டுமன்றோ?
பொற்புடைய நம்நாட்டின் பண்பனைத்தும்
புறக்கணிக்கும் குறையுடைகள் மலியுமோர்பால்!

பன்றிபல குட்டிகளை ஈவதே போல்
பயனில்லாப் படங்கள்பல எடுத்தல் விட்டே
ஒன்றிரண்டு நற்படங்கள் போதும்; ஞாலம்
உளவரைக்கும் அவர்புகழை நிலைநிறுத்தும்!
இன்றிதனைப் படத்தொழிலில் ஈடுபட்டோர்
இதயத்தில் சிந்திக்க வேண்டும் நன்றாய்.
வென்றிதரும் நற்படங்கள் நல்ல கொள்கை
வேரூன்றச் செயும்வகையில் வருதல் வேண்டும்!

# மன்னிக்க வேண்டுகிறேன்

மோகனுக்கு அவளைப் பார்த்ததிலிருந்து மனம் ஒரு நிலையிலில்லை. அழகா அது? எப்பேர்ப்பட்ட அழகு! சிவப்பு என்றால் அப்படி ஒரு சிவப்பு. செக்கச் சிவந்த மேனி, சிங்கார முகம், கட்டான உடல், கவர்ச்சி நிறைந்த எழில். அவள் அழகுக் கேற்ற வண்ணம் உடை தேர்ந்தெடுத்து அணிந்திருந்ததால் அழகு ஆயிரமடங்கு பெருகிக்காணப்பட்டது. பேரழகியான அவளைப் பார்த்தவுடனேயே அவள் கேரளத்துக் கட்டழகியாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவளை அவன் அன்றுதான் முதன் முதலாகப் பார்க்கவில்லை. கடந்த ஒரு வாரகாலமாகப் பார்த்து வருகிறான். அவள் அழகு அவனை முதன் முதலாகப் பார்த்தபோதே கவர்ந்துவிட்டது. அதன் பிறகு அவளை அடிக்கடி பார்க்கவாரம்பித்தான்.

அவள் யார்? அவள் பெயரென்ன இவற்றினைத் தெரிந்துகொள்ள அவன் மிகவும் ஆவலோடு இருந்தான். அதற்கு வழியா இல்லை. அவள் வீட்டுக்குப்பக்கத்திலிருந்த ஒரு சிறுவனை அழைத்து அவனுக்கு காபி டிபன் வாங்கிக் கொடுத்து அவனுக்கு வேண்டிய விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டான்.

அவள் பெயர் லலிதாமேனன். லாகிரி பொருள் தரும் 'போதையூட்டக்கூடிய லாவண்யம் நிறைந்த அவளுக்கு பெயர் லலிதா! பொருத்தமான பெயர்தான். அவளுக்கு வயது இருபத்து இரண்டாம். இதுபோன்ற இன்ன பிற விவரங்களை அறிந்த மோகனுக்கு அவளைப் பற்றிய வேறொரு சேதி திடுக்கிட வைத்தது. உண்மையாக இருக்குமா என்றுகூட ஐயப்பட்டான். அவளைப் பார்த்தால் அப்படி இல்லையே. பூத்துக் குலுங்கும் புது மலர் போன்று அல்லவா இருக்கிறாள். செடியில் அன்று மலர்ந்த ரோஜா போன்று புத்துணர்ச்சியுடன் அல்லவா இருக்கிறாள். அச்சேதி சரியாக இருக்குமா? இருந்தால்தான் என்ன நமக்கு அவள் கிடைத்தால் போதும், என்றெல்லாம் எண்ணமிட்டபடி இருந்தான் மோகன்.

அதிகம் படித்து பட்டம் பெறவில்லை என்றாலும்கூட மோகன் நல்லதொரு வேலையில் இருந்தான். இங்குள்ள தொழிற்சாலையில் நல்ல வருவாயும், ஆண்டு ஒன்றுக்கு கனிசமான தொகை போனசாகவும் பெற்று வரும் மோகனுக்கு கவலை என்பதே தெரியாமல் பல மலர்களில் தேன் குடிக்கும் வண்டுபோல் சுற்றித்திரிந்தான். வேலைக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் நன்கு உடை உடுத்திக் கொண்டு நங்கையரை நாடிச் செல்வான். ஏதோ ஒரு தொகையை மட்டும் வீட்டுக்குக்கொடுத்துவிட்டு மீதியை தன் "கிருஷ்ண லீலை"க்குப் பயன்படுத்துவான். அத்தகைய குணமுடையவனின் கண்ணில் பட்ட லலிதா மட்டும் தப்ப முடியுமா? அதுவும் அழகிலும் அழகி பேரழகி. அவளை வாளாவிட்டுவைப்பதா?

வி. ஆர். மதனகோபால், எம்.ஏ. பி.காம்

மோகனின் மனத்திரையில் அம்மங்கையின் மனோகர உருவம் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது. லலிதாவின் பருவமும், அழகு உருவமும் அவனை அலைக்கழித்தன. எப்படியாவது அவளைத் தன் பக்கம் கவர்ந்துவிடுவது என்று திட்டமிட்டான்.

அன்றும் அவளைக் கண்டான். கண்டபின் வாளாவிருக்கவில்லை. அழகான புன்முறுவல் ஒன்றை உதிர்த்தான். அவளும் பதிலுக்கு மென்நகை ஒன்று சிந்தினாள். ஆகா வெற்றி! அவள் கவனத்தை கவர்ந்து விட்டான் அவன். இனிபடிப்படியாக முன்னேறி அவளை தன் வலையில் போட்டுக்கொள்ள வேண்டும்.

மோகனின் நண்பன் செல்வம். செல்வம் அத்தகைய குணமுடையவன் அல்ல. மோகனின் நடத்தை அவனுக்குப் பிடிப்பதில்லை. தன்னால் இயன்ற அளவு அறிவுரை கூறுவான், ஆனால் எதையும் பொருட்படுத்தாது தன் வழியே நடப்பவன் மோகன். இருந்தும் அவனால் செல்வத்தின் நட்பினை உதறமுடியவில்லை. மோகனிடம் ஒரு குணமுண்டு. அவன் செய்யும் எதையும் ஒளிவு மறைவின்றி செல்வத்தினிடம் சொல்லிவிடுவான். அப்படியேதான் இந்த விஷயத்தைப் பற்றியும் செல்வத்தினிடம் சொன்னான் மோகன்.

"நீ செய்வது எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை மோகன்" என்றான் செல்வம்.

"என்னப்பா, இது புதுசா நான் என்ன செய்யறேன். மாமூலா செய்வதுதானே, நான் பாத்தேன். அவளும்பாத்தாள். நான் அவளை விரும்புவது போல் அவளுக்கும் என் மீது நாட்டம் இருக்கிறது. எனவே நான் அவளை அடைய முயற்சி பண்றேன். இதிலென்ன தப்பு," என்று பதிலளித்தான் மோகன்.

"என்னவோ, நீசெய்யறது நல்லாயில்லே. நல்ல பெண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிகிட்டு குடும்பத்தை நடத்தறதை விட்டுட்டு கண்டவளோடு சுற்றுவதைத் தொழிலாகக் கொண்டு விட்டாய்."

"உனக்கென்ன தெரியும் செல்வம். கல்யாணம் பண்ணிக்கிட்டவனுக்கு ஒண்ணே ஒண்ணு. கல்யாணம் ஆகாதவனுக்கு எத்தனையோ." என்றான் சிரித்தபடி மோகன்.

"கண்ணன் காட்டிய வழியில் நடக்கிறேன் என்கிறாய் அல்லவா?"

"ஆமாம்."

"என்னவோ நான் இதற்குமேல் ஏதும் சொல்வதற்கில்லை. ஆனால், கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு." என்று சொல்லிவிட்டு விடைபெற்றான் செல்வம்.

மோகன் வழக்கம்போல் லலிதா மேனனைப் பார்த்து கவர்ச்சிப் புன்னகை உதிர்த்துக் கொண்டிருந்தான். அவளும் பதிலுக்குப் புன்முறுவல் பூத்தாள். அதுவே அவனுக்கு உச்சி குளிர வைத்தது. வேறு பெண்களைப்போல் அல்லாமல் அவ

னுக்கு அவள்மீது தனிப்பட்ட பாசம் ஒன்று உண்டானதை உணர்ந்தான், அதுதான் காதலா?

எப்படியும் அவளிடம் பேசிவிடுவது என்று முடிவெடுத்துக் கொண்டான். அதற்கான வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தான்.

அன்று அவனுக்கு அந்த வாய்ப்பு கிட்டியது. அவள் தனியாக வந்து கொண்டிருந்தாள் அவன் எதிரில். அவளைக் கண்டதும் அவனுக்கு இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. இலேசாக உடம்பும் நடுங்கியது. தன்னைச்சமாளித்துக்கொண்டு அவளை நெருங்கினான் அசட்டுப்புன்னகையுடன்.

சர்வ சாதாரணமாக அவனை நோக்கினாள் அவள். அவன் சிரிப்பிற்கு அவள் மெல்ல முறுவலித்தாள்.

அவளை அணுகியதும் "நான் தங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும்." என்றான்.

அவளுக்கு அவன் கேட்டது சரியாகப் புரியவில்லை போலும். "என்ன?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள். மோகனுக்கு ஆங்கிலம் அவ்வளவாக வராது. ஏதோ பட்லர் இங்கிலீஷ் மாதிரி பேசுவான்.

அதனால் தட்டுத் தடுமாறி ஆங்கிலத்தில் அவன் அவளிடம் பேச வேண்டும் என்பதைச் சொன்னான்.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் "என்ன பேசவேண்டும்?" என்றாள்.

எதையோ சொன்னான். அவளும் என்னவோ பதிலளித்தாள். பின்னர் தங்களை மாதிரி பெண்களின் நட்பை பெற பாக்கியம் செய்திருக்கவேண்டும். நீங்கள் வேறு விதமாக நினைக்காவிட்டால், வாங்களேன் காபி சாப்பிட்டு வரலாம்" என்று வினயமாகக் கேட்டான் மோகன்.

"பரவாயில்லை. இருக்கட்டும்." என்றாள் லலிதா.

"இன்னொன்று. இன்று மாலை ஒரு சினிமாவுக்குப் போகலாம். வர்றீங்களா?" என்று கேட்டான்.

"சினிமாவுக்கா?

"ஆமாம். லவ்ஸ்டேச்சு என்னும் ஆங்கிலப்படம் செக்சி படமாம். போகலாமே" என்று கேட்டான் மோகன்.

"இல்லை நான் வருவதற்கில்லை." என்று பதிலிறுத்தாள் லலிதா.

அதைக் கேட்ட மோகனின் முகம் வாட்டமடைந்தது ஏமாற்றத்தினால்.

மேலும் ஒன்று—நான்கூட உங்களிடம் தனியாகப் பேசவேண்டும். நாளை மறுநாள் சரியாக ஆறு மணிக்கு குவாலிடி ரெஸ்டாரெண்டில் என்னைச் சந்தியுங்கள். என்ன இதை யாரிடமும் சொல்லவேண்டாம். நாளை மறுநாள் ஆறுமணிக்கு நினைவிருக்கட்டும். என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்து சென்றுவிட்டாள் லலிதா.

ஆச்சரியமும் அதே நேரத்தில் ஆனந்தமுமாக இருந்தது மோகனுக்கு. அவனிடம் லலிதா தனியாக பேசவேண்டுமாம். என்ன இருக்கும்? அதுவும் குவாலிடிரெஸ்டாரெண்டில்? மோகனுக்கு மிக்கமகிழ்ச்சியாக இருந்தது.

ஆவலுடன் வந்து தன் நண்பன் செல்வத்தினிடம் அவ்விஷயத்தைச் சொன்னான். அதைக் கேட்ட செல்வம் சற்று சிந்தனை செய்துவிட்டு கேட்டான், "எத்தனை மணிக்கு உன்னை வரச் சொன்னார்கள்?"

"மாலை ஆறு மணிக்கு"

"குவாலிடி ரெஸ்டாரெண்டில் அல்லவா?"

"ஆமாம்."

"நீ போகப் போகிறாயா?"

"போகாமல்இருப்பேனா. ஆண்டவனாகப் பார்த்து அளித்த வாய்ப்பல்லவா? போகிறேன், போய் அப்பொன் மேனியாளைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டுவேன். அவள் அன்பினைப் பெறுவேன்." என்றான் மோகன்.

"சரி, போய்விட்டு வா" என்றான் செல்வம்.

அன்று மோகனுக்கு இருப்பே கொள்ளவில்லை. நிலையில்லாமல் தவித்தான். நேரம் மிகமெதுவாகப் போவதுபோல் உணர்ந்தான். ஆறு மணி எப்பொழுது அடிக்கும் அவ்வழகியைக் காணலாம் என்று துடித்தபடி இருந்தான்.

தன்னிடமுள்ள நல்ல சூட் ஒன்றை அணிந்து டை கட்டிக் கொண்டு தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்தான். தான் மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்தினான்.

பின்னர் புறப்பட்டான். ஆறுமணியாகும் முன்னரே குவாலிடிரெஸ்டாரெண்டை அணுகினான். உள்ளே சென்று அமர்ந்தான். அவளைக் காணவில்லை. இன்னும் ஆறு மணி ஆகவில்லையே அதனால் வரவில்லை என்று எண்ணினான். சுற்று முற்றும் பார்த்தான். அதற்குள் பரிமாறுபவன் வந்தான். இன்னொருவர் வர வேண்டும்; அதற்காகக் காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான். பின்னர் வருவதாகச் சொல்லிவிட்டு பரிமாறுபவன் சென்றான்.

மணி 6-10 இன்னும் லலிதா வரவில்லை.

மணி 6-15 ஆ! அதோ வந்துவிட்டாள். எழிலென, அழகு மயிலென அவள் ஆடி அசைந்து வந்தாள். அவள் உடுத்தியிருந்த அந்த சிவப்புவண்ண உடை அவள் அழகைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டியது. அவள் அழகில்லயித்த மோகன் அவளை வரவேற்கக்கூட முடியாமல் பிரமித்திருந்தான். புன்னகையுடன் வந்த அவள் அவன் எதிரில் அமர்ந்தாள்.

"தாமதத்திற்கு மன்னிக்கவும். ஆடோ கிடைப்பது கஷ்டமாகிவிட்டது" என்றாள்.

"பரவாயில்லை. என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"காபி மட்டும் போதும்."

"வேறு ஏதாவது சாப்பிடுங்களேன்?" என்று கேட்டான் மோகன்.

"எதுவும் வேண்டாம் காபி மட்டும் போதும்."

"சரி" என்ற மோகன் இரண்டு கப் காபிக்கு ஆர்டர் கொடுத்தான்.

தன்னையே ஆவலுடன் பார்க்கும் மோகனை உற்றுப்பார்த்தாள் லலிதா. பின்னர் பேசத் துவங்கினாள். "மிஸ்டர் மோகன்."

தன் பெயரை அவள் அழைப்பதைக் கேட்ட அவன் திடுக்கிட்டான். அவன் அவளிடம் தன் பெயரை சொல்லியிருக்கவில்லை. பின் எப்படிஅவளுக்குத் தெரியும்?

"உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா, மிஸ்டர் மோகன். நான் உங்கள் பெயரை அறிந்ததில். என்னைப் பற்றி நீங்கள் எப்படி விசாரித்துத் தெரிந்து கொண்டீர்களோ அப்படியே நானும் உங்களைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டேன். உங்கள் தந்தையின் பெயர் தணிகாசலம் இல்லையா?" என்று கேட்டாள் லலிதா.

"ஆம்." என்று மெதுவாகப் பதிலளித்தான் மோகன்.

"அவர் என் கணவருக்கு மிகவும் வேண்டியவர். என் கணவரை அவர் தன் இன்னொரு மகன்போல

(14-ம் பக்கம் பார்க்க)

# வினா-விடை

**கே. கிருஷ்ணன்குருப், கொல்லம்.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை என்ன?

மார்க்சிசமாக இருக்கும் என்று எண்ணத் தேவை இல்லை. "துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்ற மா-சே-துங்கின் இசம்தான் இப்போதைய கொள்கை போலத் தோன்றுகின்றது. தீவட்டியும், கையுமாக இப்போது "கலாச்சாரப் புரட்சி"யில் இறங்கி இருக்கிறார்களே தெரியவில்லை? நாடும் வீடும் எரிவாய்ப்பட்டுக் கொண்டிருப்பதும் அதனால்தான் ஐயா!

**எம். பசவப்பா, பெங்களூர்,**

வானொலியின் பிரசாரம், அரசுச் சார்புடையதாயிருக்கிறதென்று "சிண்டிகேட்" தரப்பு குற்றஞ் சாட்டியிருப்பது, எப்படி இருக்கிறது?

சண்டை பிறந்தால் உண்மை பிறக்கும் என்பதை பிரதிபலிக்கிறது! நாம், முன்பெல்லாம் இந்தக் குற்றச்சாட்டை எழுப்பியபோது, மறுத்தவர்களேதான், இப்போது இந்தக் குற்றச்சாட்டை எழுப்புகிறார்கள். எப்படியும் உண்மையை ஒப்புக்கொண்டால் சரி.

**கே. குப்புசாமி, காஞ்சிபுரம்.**

"இளந் துருக்கியர்" என்று யாரை அழைக்கிறார்கள்?

இளரத்தம் முறுக்கோடு ஓடிக்கொண்டிருப்போரை, இப்போது இப்படி நாகரிகமாக அழைக்கிறார்கள். குறிப்பாக, சந்திரசேகர் என்ற நாடாளுமன்ற உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிடும்போது இப்படிக் கூறுகிறார்கள்.

**எம். சி. ரத்தினம், மாச்சம்பாளையம்.**

கண்ணகி மதுரையை எரித்துவிட்டு, பின்பு ஐயை கோயிலை அடைந்து, வையைக் கரை வழியே சென்று, திருச்செங்கோடு என்னும் இடத்தை அடைகிறாளே, இந்த இடம் சேலம் மாவட்டத்தில் இருக்கும் திருச்செங்கோடுதானா?

இல்லை. கண்ணகி, வையைக் கரை வழியே சேரநாடு சென்று குன்றவெளி என்ற இடத்தைத்தான் அடைவதாகச் சிலம்பு செப்புகிறது.

• • •

அறிவுப் பசி ஒரு பக்கம்; காமப் பசி ஒரு பக்கம். இரண்டுக்கும் இடையே இருந்து தவிக்கிறேன். உங்கள் அறிவுரை என்ன?

உயர் நிலைப் பள்ளி மாணவர்தானே நீங்கள்? பெறவேண்டிய அறிவை, பெறவேண்டிய நேரத்தில், பெறவேண்டிய இடத்தில் பெற்றுக்கொண்டு, தின்னவேண்டியதை, தின்ன வேண்டிய நேரத்தில், தின்ன வேண்டிய இடத்தில் தின்னுங்கள்.

**என். சண்முகம், சிவகெங்கை.**

காமராசர் காங்கிரஸ் தமிழகத்தில் காலூன்றுமா?

முகையூர் தொகுதி தேர்தல் முடிந்தவுடன் கேளுங்கள்—சரியான பதில் கிடைக்கும்.

**கே. முகைதீன்பிச்சை, பள்ளிப்பட்டி**

சென்னையில், காமராசர் இன்றி காங்கிரசா என்று கேட்ட டி. டி. கே. டில்லியில், இந்திரா இன்றி காங்கிரசா என்று கேட்டிருப்பது எதனைக் குறிக்கிறது?

டி. டி. கே. ஒரு சந்தர்ப்பவாதி என்பதையும் எப்பொழும் ஆளுங்கட்சியின்கைலாகுக்குக் காத்துக்கிடக்கும் நிலையிலிருப்பவர் என்பதையும்தான் காட்டுகிறது.

**செ. சுந்தரராசன், மாயூரம்.**

'காஞ்சி'யில் திரைப்படப் பகுதி ஒன்று ஆரம்பிப்பீர்களா?

அந்தப் பகுதி 'காஞ்சி'க்கு அவசியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**மறைமுதல்வன், திருச்சி.**

காங்கிரசை, அதன் அடிப்படைக் கொள்கைகளை எதிர்த்து வந்த சுதந்திரா, சிண்டிகேட் காங்கிரசை ஆதரிப்பதன் காரணம் என்ன?

ஆசை வெட்கமறியாது என்பார்களே, அறியமாட்டீர்களா?

**புலவர் மணிமுடிச்சோழன், சென்னை.**

மௌண்ட் சாலையை அண்ணா சாலையென்று மாற்றியிருப்பதை காங்கிரஸ் கண்டிப்பது எப்படி இருக்கிறது?

மொரார்ஜி தரப்பினர்தான் ஓலமிட்டிருக்கிறார்கள். "மௌண்ட்" பிரபுக்களின் மீதுள்ள பற்று, பாசம் அப்படி! எளிதில் போகுமோ? பக்தவத்சலம் அணை, காமராசர் நீர்த்தேக்கம் என்பதெல்லாம் எப்படி வந்தன என்று கேட்டுப் பாருங்கள்! முகம் தொங்கிப் போகும்!

**ஆர். மணவாளன், ஆற்காடு.**

"காதல்—ஒரு தத்துவம்" என்பது சரியா?

எந்தக் காதலைக் கேட்கிறீர்கள்? இந்தக் காலத்துப் பள்ளி மாணவர்களது காதலைக் கேட்கிறீர்களா? இலக்கியங்களில் காணப்படும் தலைவன், தலைவியர் பற்றிய காதலையா?

**இரெ. குமாரசாமி, கோவை.**

கூட்டுறவு இயக்கங்கள் பற்றிய தங்கள் கருத்தென்ன?

கூட்டு — உறவு என்று பிரித்துப் பார்க்கும்போது ஏற்படுகின்ற இன்பம், கூட்டுறவு என்று இணைத்துப் பார்க்கும்போது ஏற்படவில்லை. காரணம், கூட்டுறவு நிறுவனங்கள், அவை தோற்றுவிக்கப்பட்டதன் அடிப்படைகளை மறந்துவிட்டதுதான்!


## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் நவம்பர் மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-3.



# அண்ணா இல்லையென்றால்......

கண்மூடிப் பழக்கங்கள் நாட்டை யாண்ட
காலத்தின் துவக்கத்தில் இந்த நாட்டில்
மண்ணோடு மண்ணாக அப்ப முக்கம்
மறைந்தொழிய மகத்தான பணிகள் தன்னில்
வெண்தாடி வேந்தரீடு பட்ட போது
விருப்புடனே அவரோடு சேர்ந்து ழைத்த
அண்ணாதான் இல்லையென்றால் இந்த நாடு
அவதியுற்று அழிந்துகூடப் போயி ருக்கும்!

விண்ணுலகில் தேவனுள்ளா னென்று சொல்லி
வீணான கதைபேசும் பக்த ராலே
மண்ணுலகில் பிறந்திட்ட மாந்த ரெல்லாம்
மடமையிலே யுழன்றிட்டார்! மதிம யங்கி
கண்மூடிப் பழக்கத்தி லாழ்ந்து போனார்!!
கலக்கமெனுங் கடல்தனிலே சிக்கி னோர்க்கு
எண்ணுகின்ற ஆற்றலெனும் படகு காட்டி
இழுத்துவந்து தெளிகரையிற் சேர்த்தார் அண்ணா

அறிவென்ற சொல்லுக்கு விளக்கம் தந்து
ஆன்றோர்கள் வாழ்ந்திட்ட தன்மை கூறி
செறிந்திட்ட வளமெல்லாம் எடுத்துக் கூறி
செந்தமிழர் வரலாற்றைத் தொகுத்து ரைத்து
அறியாமைப் பெருநோயால் சீர ழிந்த
அடிமைமனப் போக்குதனை நீக்கு தற்கு
அறிவுள்ளோர் அனைவரையும் திரட்டி ஒன்றாய்
அணிவகுத்துக் காட்டியவர்! அறிஞர் அண்ணா!

சொல்லெல்லாம் செயலாகா என்று சொல்லும்
சோம்பேறிக் கூட்டத்தார் வியக்கும் வண்ணம்
சொல்வதெல்லாம் செய்வதற்கே என்று காட்டி
சொன்னபடி அரிசிதந்தார்! இருப தாண்டாய்
கல்மனத்தார் ஆட்சியிலே கண்ட துண்டா?
கலப்புமணச் சட்டத்தை கேட்ட துண்டா?
தொல்புகழ்சேர் 'தமிழ்நாடு' இந்தி தனைத்
துரத்தியதை! துரைஅண்ணா அன்றோ கண்டார்!

அனைத்திலுமே ஓரளவு அறிவு பெற்றோர்
அனைத்தறிவு சிலதுறையில் நிறையப் பெற்றோர்
நினைத்திடிலோ அண்ணாதான் தமிழர் நெஞ்சில்
நிலையாக நின்றிடுவார் இந்த நாட்டில்
இணையில்லா பெருமைதனைச் சேர்த்த அந்த
இனியவராம் அண்ணாதான் இல்லையென்றால்
தினையளவு நன்மையேனும் நமக்கு உண்டா?
தீரர்அண்ணா இல்லையெனில் எதுவு மில்லை!

புலவர் மா. தமிழன்பன்.

12-ம் பக்கத் தொடர்ச்சி

பாவித்து வருகிறார். அவர் பணி புரியும் அலுவலகத்தில்தான் என் கணவரும் பணி புரிகிறார். உங்கள் குடும்பத்தைப்பற்றி நிறைய சொல்லியிருக்கிறார். அவர் மகன் நீங்கள் என்பது தெரிந்துதான் நான் உங்கள் புன்முறுவலுக்கு நானும் பதில் புன்முறுவல் பூத்தேன். ஆனால் நீங்கள் என் புன்முறுவலையும், சிரிப்பையும் வேறுவிதமாக எடுத்துக்கொண்டு என்னிடம் சினிமாவுக்கு வா என்று கூப்பிட்டீர்கள். அன்றே நான் பொது இடத்தில் ஏதும் பேசி உங்களை அவமானப் படுத்தியிருக்க முடியும். ஆனால் உங்கள் அப்பாவின் நல்ல குணத்திற்காக நான் பேசாமலிருந்து பின்னர் உங்களுக்கு புத்தி புகட்டவேண்டும் என்று எண்ணினேன். நான் திருமணம் ஆனவள் என்று தெரிந்திருந்தும் நீங்கள் அப்படி நடந்துகொண்டது. சே. ஒரு மனிதன் செய்யக்கூடிய காரியமா? அதுவும் ஒரு பெண்ணைப் பார்த்து பல்லிளித்ததும் அவளை சினிமாவுக்கு கூப்பிடுகிறீர்களே பெண்கள் என்ன அவ்வளவு மலிவான சரக்கா? நீங்களே யோசித்துப் பாருங்கள், நீங்கள் திருமணமாகி உங்கள் மனைவியை யாராவது அப்படி அழைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்று கூறினாள் லலிதா.

அவள் பேச்சைக்கேட்ட மோகன் தலைகுனிந்திருந்தான். இத்தகையதொரு அனுபவம் அவனுக்கு ஏற்பட்டதே இல்லை. அவள் கைநீட்டி அவனை அடித்திருந்தால்கூட அவன் பொறுத்துக் கொண்டிருப்பான். அவள் அம்மாதிரி பேசியது அவன் இதயத்தைச் சுட்டது. மனம் நோக அவளைப் பார்த்தான்.

"இந்த விஷயத்தை நான் என் கணவரிடம்கூட சொல்லவில்லை. நானே உங்களிடம் பேசி முடிவெடுக்கத் தீர்மானித்தேன்'' என்றாள்.

மோகனுக்குப் பெருத்த அவமானமாகப் போய்விட்டது, அவனுக்கு அழுகையாகவும் இருந்தது, ஆங்கிலத்திலே சொல்வார்களே "இட் தி அம்புள் பை'' என்று அப்படி ஆகிவிட்டதே என்று வருத்தமுற்றான். எப்படிப்பட்ட அவமானம், எத்தகைய அவமரியாதை. எதையோ நினைத்து என்னவோ செய்யப்போக வேறு என்னவோ ஆன கதையாகி விட்டதே என்று மருகினான்.

ஏதும் பேசாது தலைகுனிந்திருந்த மோகனைப் பார்த்து மீண்டும் லலிதாவே பேசினாள். "உங்களை அவமானப்படுத்த வேண்டும் என்று நான் இதைச் சொல்லவில்லை. எப்படிப்பட்ட நல்ல குணம் படைத்த ஒருவருடைய மகன் இப்படி திரிவது எவ்வளவு இழுக்கு என்பதை உணர்த்தத்தான் நான் இதை இவ்வளவு தூரம் வளர்த்து பின்னர் சொன்னேன். நீங்கள் திருந்தினால் அதுவே எனக்குப் போதும்.''

குனிந்திருந்த தன் தலையை நிமிர்த்தி மோகன் அவளைப் பார்த்தான். கலங்கியிருந்தன அவன் கண்கள். கம்மிய குரலில் "சிஸ்டர், என்னை மன்னித்துவிடுங்கள். பெண்களை போகப் பொருளாக எண்ணி எவளையும் எளிதில் கைக்குள் போட்டு கசக்கிவிடலாம் என்ற அகம்பாவத்துடன் இருந்த எனக்கு நல்ல பாடம் கற்பித்தீர்கள். இதை நான் என்றும் மறக்கமாட்டேன். நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும் என்றான்''.

அவன் கண்களிலிருந்து வெளிப்பட்ட கண்ணீரோடு அவன் மனத்திலிருந்த மாசும் வெளிப்பட்டு, மறைந்தொழிந்தது.

# நச்சு மரம் பூக்கிறது எச்சரிக்கை!

பொதுவாகக் காங்கிரஸ் முழுவதுமே ஒருஊழல் நிறைந்த நிறுவனம் என்று மக்கள் முடிவெடுத்த வேளையில், 'வேறொரு கட்சி உருவாகவில்லையே — பொறுப்பை ஒப்படைக்க,' என்று மக்கள் வருந்திய நேரத்தில் திருமதி காந்தி. 'காங்கிரசின் ஊழலுக்குக் காரணமே ஒரு சிறிய அறையிலே கூடும் ஒரு சில தலைவர்கள்தான்' என்றும் 'அவர்களைத் தொலைத்தால் (கட்சியிலிருந்துதான்) எல்லாம் சரியாகிவிடும்' என்றும் குரல் கொடுத்தார், கொடுத்த குரலுக்கு இப்போது செயல் வடிவமும் கொடுத்துவிட்டார்.

காங்கிரசிலிருந்து பிற்போக்குவாதிகள், சோசலிசத்தில் தீவிர அக்கறையற்றவர்கள், தன்னலக்காரர்கள், பழம் பெருச்சாளிகள் ஆகியோர் 'துரத்தப்பட்டு விட்டனர்.' அல்லது அப்படிப்பட்டவர்களின் 'பிடிப்பிலே' இருந்து உண்மைக் காங்கிரஸ் தப்பிவிட்டது. தப்பி தனித்தியங்கத் தொடங்கிவிட்டது.

உயர்திருவாளர் சி. சுப்பிரமணியம் அவர்களை இடைக்காலத் தலைவராகக் கொண்டு 'தூய' காங்கிரஸ் வேலைகளைத் தொடங்கிவிட்டது.

இப்போது நியாயமாகவும் இயல்பாகவும் பொதுமக்களின் உள்ளங்களிலே எழும் கேள்வி ஒன்று உண்டு. இந்தக் கேள்வியைச் 'சிண்டிகேட்டினரும்' கேட்பர். அவர்கட்குக் கேட்கத் தகுதியில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால், தேர்தல் நேரத்தில் தனித் தனியாகப் பிய்த்துக் கொள்ளப் போகும் வேற்றுக் கட்சியினரும் மக்களும் இதனைக் கேட்கத்தான் செய்வர். திருமதி இந்திரா அதற்கு இப்போதேபதில் தயாரித்துக்கொள்வது நல்லது. கேள்வி இதுதான்:

"நீங்கள் அமைத்திருக்கிற—அல்லது புத்துயிரும் புதுத்தெம்பும் அளித்து வளர்க்கிற—உங்கள் தலைமையின் கீழ் உருவாகிற காங்கிரசில்—உங்கள் நிழலில் ஊழல் காங்கிரசார் இல்லையா? சோசலிசதத்துவத்துக்கே வெடிவைக்கும் ஊழல் வாழ்க்கையினர் இல்லையா? உங்களிடம் வந்திருப்பவர்கள் எல்லாம் மாசுமறு—அப்பழுக்கு இல்லாத பத்தரைமாற்றுத் தங்கங்களா? வடிகட்டப்பட்ட தூய வாழ்வினரா?"

அரசியலில் எந்தக் குற்றச்சாட்டை நாம் பிறர்மீது சுமத்துகிறோமோ, அதே குற்றச்சாட்டு நம்மீது சுமத்தப்படாமல் பார்த்துக் கொள்வதுதான் அரசியல் அறம். சுமத்தப்பட்டால் அதற்குத் தக்க முறையில் பதில் சொல்ல வேண்டுவது அரசியல் கடமை!

முந்திரா பேர ஊழலில் பேர் "போன" — பல கம்பெனிகளுக்குச் சொந்தக்காரரான — தட்டை கிருஷ்ணமாச்சாரியாரும், நீதிமன்றத்துப் படிக்கட்டுகளில் இன்றும் ஏறியிறங்கும் பிஜு பட்நாயக்கும், பத்து ஆண்டுகளாக வரிகட்ட மறந்து 'சோசலிச நினைவாகஇருந்துவிட்ட ஜெகஜீவன்ராமும், மொழிவெறியர் என்று பெயர் எடுத்த சேத் கோவிந்ததாசும், கே. டி. மாளவியாவும், மாணவர்களைச் சுட்டு வீழ்த்துவதன் மூலம் தமிழகத்திலே காங்கிரசுக்குச் சமாதி கட்டிய பக்தவத்சலமும் ஊழல் என்ற சொல்லைக் காதாலேகூடக் கேட்டறியாத அப்பாவிக் காங்கிரஸ்காரர்களா?

இன்னும் இராசாக்களாகஇருந்தே சாதிக்க இயலாத சோஷலிசத்தை மந்திரியாக இருந்து சாதிக்க வந்திருக்கும் கரண்சிங்கும் தினேஷ்சிங்கும் உண்மைச் சோஷலிசத்தின் காவலர்களா? நாம் உருவாக்க எண்ணுவது மக்கள் சோஷலிசமா? அல்லது 'ராஜாக்கள் சோஷலிசமா'

மேலும் திருமதி இந்திராவைத் தொடர்ந்து வருவதாகச் சொல்லிக் கொண்டு இப்போது உடன் வரும் காங்கிரஸ்காரர்களில் பலருக்குச் சொந்த 'லாபநட்டம்' இருக்கிறது எனறு சொன்னால் அதில் உண்மை இல்லை என்று சொல்லமுடியாது. சொந்த நலனைப் பாதிக்காது என்று உறுதியாகத் தெரிந்தால் இந்த ஆதரவு நீடிக்கும். இல்லாவிட்டால் அற்றுப்போகும். அதற்கு இந்திரா கூட்டிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலேயே ஆதாரம் கிடைத்திருக்கிறது தற்காலிகத் தலைவராகச் சுப்பிரமணியத்தின் பெயரைச் சொல்வதற்கு முன் திரு. சஞ்சீவையாவின் பெயரை யாரோ சொல்ல, அதை பிரம்மானந்தரெட்டி எதிர்க்க, கடைசியில் திருமதி இந்திரா இப்போது வலுவுடன் இருக்கும் பிரம்மானந்தரெட்டியின் சொல்லுக்கே மதிப்பளித்ததாகத் தெரிகிறது என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிடுகிறது.

இவ்விதம் பலர் பலவற்றை எதிர்பார்க்கிறார்கள். அமைச்சரவையிலே இடங்கள் காலியிருப்பதை அறிந்து சிலர்; கவர்னர் இடங்கள் காலியிருக்கின்றனவாமே என்று சிலர்; நாடாளுமன்ற ராஜ்யசபா'வின் துணைத் தலைவர் பதவிக்கு ஆள் வேண்டுமாமே என்று சிலர், தூதுவர் வேண்டுமா என்று சிலர்.

வேண்டுமானால் திருமதி காந்தி ஒரு பேச்சுக்கு 'நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடலாம் என்றிருக்கிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டுப் பார்க்கட்டும். உடனே நாம் மேலே குறிப்பிட்ட இந்தக் கூட்டம் அனைத்தும் சிண்டிகேட்டின் பக்கந்தான்! அப்புறம் ராம்சுபாக்சிங்குக்கோ மொரார்ஜிக்கோ 'ஜே'தான்! இந்திராவை யார்கண்டார்கள்? சோசலிசத்தை யார் கண்டார்கள்?

இந்த நிலையை எதற்கு எடுத்துக் காட்டுகிறோம் என்றால் தீவிரமாகவும் உளமாரவும் சோஷலிசம் காண வேண்டுமென்றுத்துடிக்கும் திருமதி காந்தியின் முயற்சி, கருவிலேயே நோய் கொண்டதாக ஆகிவிடக் கூடாது—எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதற்குத்தான்!

நாம் மேலே எடுத்துக் காட்டிய கூட்டத்தினர் நச்சுமரங்களுக்குச் சமமானவர்கள். இந்த நச்சுமரங்கள்,திருமதி இந்திராவின்சோசலிசத் தோட்டத்தில் பூத்திருப்பதைப் அறிகிறோம். இந்த நச்சுமரங்களிலே சில பட்டுப்போனவை. சில பருவ மாறுதலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளும் திருட்டுக்குணம் படைத்துத் தப்பி வந்திருப்பவை. சில இப்போது முளைத்தவை. இவற்றை இந்திரா நீருற்றி வளர்ப்பாரானால் மீண்டும் காங்கிரஸ் ஒரு நச்சுத் தோட்டம் ஆவதைத்தான் பார்க்க முடியும். பட்ட மரங்கள் பட்ட மரங்களாகவே இருக்கட்டும். தப்பிப் பருத்துவிட்டவைகளை அஞ்சாமல் வெட்டி எறியவும், புதிதாகமுளைத்த சிலவற்றை முளையிலே கிள்ளி எறியவும் திருமதி இந்திரா முன்வருவார் என்று நம்புகிறோம். இதில் அவர் தவறக்கூடாது.

தவறிவிடுவாரானால், எந்தக் காங்கிரசானால் என்ன? காங்கிரஸ் காங்கிரஸ்தான்"—என்று மக்களும் தவறாமல் ஒரு முடிவுக்கு வந்துவிடுவர். அப்புறம் யாராலும் அதை மாற்ற முடியாது!

—மலையமான்

காஞ்சி 30—11—69 REGD. NO. M. 8326

# குறையும்-நிறையும்

ஆசிரியர் அவர்களுக்கு,

நான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்று தமிழாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். அண்மையில், தமிழக அரசின் கோரிக்கையின், பேரில் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், செனட்டும், இனி, வித்துவானுக்குப்பதில் "புலவர்" என்றேவிருது வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். அரசுக்கும், துணைவேந்தருக்கும் என்மனமார்ந்த பாராட்டுக்கள். ஆனால் எனக்கு ஒரு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. இனி வழங்கப்படும் விருதுகள் மட்டும் "புலவர்" என்றிருக்குமானால், இதுவரை வழங்கப்பட்ட "வித்துவான்" என்ற பட்டமும், "புலவர்" என்று மாற்றித் தரப்படுமா? புலவர் என்றே போட்டுக் கொள்ளலாமா? என்பதை, பல்கலைக்கழகம் தெளிவு படுத்தினால் நல்லது.

வித்துவான் நாராயணன்,
விருகம்பாக்கம்.

• • •

ஆசிரியர் அவர்களுக்கு,

'காஞ்சி'யில் 'குறையும் நிறையும்' புதிய பகுதியைக்கண்டு பெருமிதம் கொண்டேன். மற்ற ஏடுகளில் வருகின்றதைப் போன்றதுதான் இதுவும் என்றாலும், இதனைக் 'காஞ்சி'யில் வெளியிடுவதானதுபயனுடையதாகவே இருக்கும். அந்தப் பயன் கருதியே எனது கருத்தையும்,இங்கு படைத்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசு, அதிகாரிகள் மூலமும் அனுமதிக்கப்பட்ட ஏஜெண்டுகள் மூலமும், நெல் சாகுபடி முனைகளில், பல கோடிக்கணக்கில் முதலீடு செய்து, நெல் கொள்முதல் செய்கிறது.கொள்முதல், நெல் எந்தக்காரணத்தாலோ, ரேஷன் கடைகளில், அல்லது நியாய விலைக்கடைகளில் விநியோகிக்கப்படுகின்ற தரக்குறைவான, மிக மட்டமான அரிசியின் அளவுக்குஇருக்கும்என்றுஎன்போன்றவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரே ரகமான அரசி, நியாய விலைக் கடைகளில் மிக மட்டமான தயாரிப்பாகவும், வெளிமார்க்கெட்டில் நல்ல தயாரிப்பாகவும் இருப்பதைப் பார்க்கும்போது, பொதுமக்களுக்கு சட்டென்று அரசாங்கத்தின் மீதுதான் கோபம் ஏற்படுகிறது. அரைவை மில்காரர்கள் தங்கள் கொள்ளை லாபங் கருதித்தயாரிக்கும் தரக்குறைவான அரிசியை, அதற்குரிய அதிகாரி (குவாலிடி இன்ஸ்பெக்டர்) எப்படி விற்பனைக்கு அனுமதிக்கிறார் என்பது புரியாத புதிராக இருக்கிறது. அல்லது, அந்த அதிகாரி, அரசுக்குக் கடமைப் படுவதை விட்டுஅரிசி மில்காரர்களுக்கு கடமைப்படுகிறாரா? என்றும் சந்தேகப் படவேண்டி இருக்கிறது! அரசாங்க ஒப்பந்தப்படி 64 சதவீதம் அரிசி கொடுக்கவேண்டிய முறையில் தயாரித்தால்கூட தரமான அரிசியைத் தரமுடியும் என்பதோடு, வெளிமார்க்கெட் நெல்லை, அந்தக் கணக்குப்படி தயாரித்தும் காட்டுகிறார்கள். அப்படி இருக்கும்போது, அரசு நெல்லை மட்டும் கீழ்த் தரமான முறையில் ஏன் தயாரிக்கிறார்கள். நாற்றமெடுக்கவேண்டும்; மக்கள் அரசை வெறுக்க வேண்டும் என்பதற்கே,அப்படித் தயாரிக்கிறார்களா? இதற்காகத்தான் என்றால், அரசு, இந்த பயங்கரவாதிகளைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா? சட்டம், தன் கடமையைச் செய்ய வேண்டாமா? அரசு அதிகாரிகள் கூட இந்தக் கொடுமைக்குத் துணை போய்க்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நம்பவேண்டியிருக்கிறது. இல்லையானால், நல்ல தரமான அரிசிக்குப் பதிலாக, தரமான நெல்லிலிருந்து, தரங்கெட்ட அரிசியை எப்படித் தயாரிக்கமுடிகிறது? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அரிசி பற்றி நாம் மிகுந்த குறைபட்டு வந்திருக்கிறோம். களைய முடிந்த இந்த குறைபாட்டை, அலட்சியம் செய்வதானது, மக்களிடமிருக்கும் அபிமானத்தை இழக்க வேண்டிய பேரபாயத்தை ஏற்படுத்தி விடக்கூடும். எந்தப் பெரிய மனிதர்களது தயவு தாட்சண்யத்துக்கும் கட்டுப்பட வேண்டியவர்களாக அரசு அதிகாரிகள் இல்லை. எனவே பாரபட்சமற்ற முறையில் அவர்கள் கடமையாற்றினால், கடமையாற்றும் போக்கில் அவர்களை அரசு ஊக்கினால், குறைகளைய வழியுண்டு. தரமான அரிசியும் மக்களுக்குக்கிடைக்கும். பொதுமக்கள்தானே, போட்டதைத் தின்பார்கள் என்று அதிகாரிகளும், அரவை மில்காரர்களும் நம்பினால், பொதுமக்களது பெருமூச்சு, அவர்களை ஒதுக்குகிற இடம், எது என்பதைக் கண்டறிய முடியாமல் போய்விடும்.

ராஜிமணாளன், திருவாரூர்.

• • •

ஆசிரியர் அவர்களுக்கு,

டிசம்பர் மாதம் 16ம் நாள், முகையூர் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் மறைந்த கோவிந்தசாமி அவர்களது துணைவியார் திருமதி பத்மாவதி அவர்களைக் கழகம், தன் கட்சி வேட்பாளராக அறிவித்திருப்பதைப் போலவே, காங்கிரசும் திருக்குறள் முனுசாமி என்பவரைக் காங்கிரஸ் வேட்பாளராக அறிவித்திருக்கிறது. இப்போது இந்த நாட்டில், நாடாளுமன்றப் பெரும்பான்மையோடு இந்திரா "காங்கிரஸ்" என்ற பெயரில் கட்சி நடத்திக்கொண்டு, அதற்குத் தற்காலிகத் தலைவராக சுப்பிரமணியம் அவர்களையும் நியமித்திருக்கிறது. நிஜலிங்கப்பா தலைமையிலுள்ள காங்கிரசை: "சஸ்பெண்ட்" செய்தும் அறிவிப்புக்கொடுத்திருக்கிறது. காங்கிரசின் நிலை இப்படி இருக்கும்போது, முகையூர் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் எந்தக் காங்கிரஸ்? என்ற ஐயத்தைக்கிளப்பி இருக்கிறது. காமராசரின் காங்கிரசானால், சட்டத்துக்குப் புறம்பானதாக அது ஆகிவிடும். சுப்பிரமணியம் காங்கிரசானால், காமராசரது ஆதரவாளர்களது பிரசாரம், ஐயத்தைக் கிளப்புகிறது. வாக்காளனாகிய என்போன்றார்க்கு வேதனையாகவுமிருக்கிறது. திருக்குறள் முனுசாமி, எந்தக் காங்கிரஸ் வேட்பாளர் என்பதைத் தெளிவுபடுத்தினால் நல்லது! எதிர்பார்க்கலாமா!

வேதாசல நாயகர்,
அரகண்டநல்லூர்.

இந்தப் பகுதி, இனி கிழமை தோறும் தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்றகுறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"காஞ்சி"
86, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-3.